உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஞானசம்பந்த குருப்யோநம:

சதாவதானம், யாழ்ப்பாணம்,

# ஸ்ரீமாந் நா. கதிரைவேற்பிள்ளை

அவர்கள் சரித்திரமும்,

ஷையார் பிரிவாற்றாமையாற் பல புலவர் சிகாமணிகளாற் கூறிய

பாக்களும்.

இவை

ஷையார் பிரதம மாணாக்கரும்

புரசை முனிசாமி நாயகர் அவர்கள் குமாரநாகிய

## ம-ா-ா-ஸ்ரீ பாலசுந்தர நாயகர்

அவர்களாலியற்றப்பட்டு,

காஞ்சிபுரம், பெ. கோவிந்தராஜ முதலியார்

அவர்களால்


சென்னை, புரசை,

பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்தில்

வெளியாக்கப்பட்டன.

1908.

விலை அணா 2.



சதாவதானம். யாழ்ப்பாணம்.

ஸ்ரீமந் கா. கதிரைவேற்பிள்ளை.

உ

சென்னை சைவசமய பக்தஜன சபையின் அக்கிராசனர்
வித்வான் ஸ்ரீமந். க. சதாசிவச் செட்டியார் B.A.
அவர்கள் கூறிய

# சிறப்புப் பாயிரம்.

திருமரு மார்பத் தொருதனித் தேவும்
தேன்முகக் கமல நான்முகத் தண்ணலும்
ஆனா னாட்டத் துவானாட் டமரரும்
முற்றத் துறந்த நற்றவ முனிவரும்
மந்திர மறைவள ரந்தத் தொகுதியும்
எண்ணில் கால நண்ணினர் தேடியும்
இன்ன தன்மைய னென்று ணர்கிலா
பசுபதிப் பெயரிய பண்ணவன் றானே
பசுபதி யாம்பரி சுணர்வீ ரெனவும்
கரணங் கடந்த கறைமிடற் றண்ணல்
சரணஞ் சேர்ந்தவன் றானேயாகி
தந்தொழி லிழந்து தனிப் பெருங்கடவுள்
ஐந்தொழி லியற்றும ருளாள ராகி
காழியில் வந்த கவுணியரிறைமுதல்
சைவா சாரியத் தலைமை யாளரே
மெய்யா சிரியர் மேவுவீ ரெனவும்
அன்னவ ரருளு மருட்பா சுரமே
பன்னருட் பாவெனப் பகர்வீரெனவும்
கற்றுணர் புலவரு மற்றவ ரெனையரும்
தெற்றென வுணர்தரத் தெருட்டிய மெய்யன்
பாத்திரஞ் சிவமெனப் பகர்தரு தெய்வ
சாத்திரப் பிரசாரஞ் செய்தருள் சதுரன்
தொல் காப்பியமுதல்பல்காப்பியமுணர்
நல்லிசை வல்ல நாவல னானோன்
மைதிகழ் கண்டன் மாணடி பரவும்
சைவப் பரசுணர் சபைபல நிறுவினோன்
அகராதி புதுக்கி யச்சிறு வித்தோன்
பகராதி பகவன் பரிதிட்மாலய
விளக்கமே முதல்மெய்ந்நூலியற்றினோன்
சொற்பொரு ளணிமுதல் சுவைதெரிந் துணர்தர
பற்பல நூற்கு பகருரை கண்டோன்
உரைகடல் சூழ்ந்த கோணமா மலையும்
தரைபுகழ்கேதீச்சரதலமிரண்டும்
கண்ணிரண் டென்ன கருதீழ நாட்டு
விளங்குயாழ்ப் பாணமேலைப்பு லோலி
நன்னகரத்துந[illegible]கப்பபிள்ளை
பன்னருந்தவத்துப்பண்பெனத்தோன்றியோன்
மாயாவாததும்சகோளரி

அத்துவிதசித்தாந்தமதோத்தாரணன்
செத்துஞ் சாவாச் சிறப்புடை யண்ணல்
கதிரைவேற் பிள்ளை சரித்திரக் கதையை
மதிபெறு மன்னோன் மாணவகனுகி
யன்னவ னிழலென யமைந்துட னுழுகி
யின்பொடு துன்பே யிசையொடு புகழே
யொப்பநாடி யுடனுழுகியவன்
பாலசுந் தரப்பெயர் பண்பின னென்று
சாலசுந் தரம்பெறத் தந்தன னதனை
யுலகன்னை யம்பிகை யும்பரிறைவி
பல்லுயி ரோம்பிப் பலவறம் புரக்கும்
தெய்வக் காஞ்சித் திருநகர் தன்னில்
செய்தவம் பெரியோன்திருமகள் விலாசன்
ஏகாமிரத்தினிதிருக்குமெம்பெருமான்
வாகா றறம்பல வகைபெறப் புரிவோன்
ஒப்புயர்வில்லாமெய்ப்புகழமைந்தோன்
சுப்பரா யப்பெயர்ச் சுந்தரனன்னோன்
மரபினன் கோவிந்த மாராஜ னிவர்கள்
வகைபெறவிந்நாள் வழங்குவ தாக
தகைபெற வச்சிற் றுபித் தனரே

---

திருமயிலை, ஸ்ரீமாந். அரங்கசாமி நாயகர் அவர்களியற்றியன

மான மறு மிழிகுணமே, பெரிதுமலி மானிடத்தின் வாழ்வுக்கஞ்சி
வானவர் வாழ் வினைவிரும்பி வான்புகுந்ததேசிகர்க்கு வந்தீங்கு
தானு மவருடன் சுமந்து மாணவகக் கடனாற்றிச் சரிதந்தீட்டிப்
பானுவென வொளிசிறந்தான் பாலசுந்தரக் குரிசிற் பாவலோனே

---

கொயம்பத்தூர் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமாந். சி. யஸ். சொக்கலிங்கம் பிள்ளை யவர்களியற்றியன

நன்னகர் மேலைப் புலோலியி லேமினிர் நல்லபுதுச்
சன்னிதிக் கந்தன் கருணு கடாட்சத்திற் றுரணியி
னன்ன ருதித்துயர் கல்வியு னோங்கிநன் ஞாலமெச்சப்
பொன்னகர் புக்கான் கதிரைவேற் பிள்ளைப் புலமையனே.

நலமுறு மந்தப் புலமையன் வாழ்க்கையி னற்சரித
முலகின ரெல்லா மறிவது நன்றென வுள்ளமமைத்
திலகிடு தீந்தமி ழின்னடை யாக வெழுதியதை
வலமுற வச்சிற் பதிப்பித்தி யார்க்கும் வழங்கினனே.

இந்தம கான்றனை யாரெனிற் கேண்மி னெடுத்திசைப்பேன் :
நந்தமன் பன்கதிர் வேற்பிள்ளை பாற்றமிழ் நன்குகற்றோ ;
னந்தமில் சீர்ப்புர சைப்பதி வாழிட மாகக் கொண்டோன் ;
நந்திவ ருத்தனற் சொல்பால சுந்தர நாயகனே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கதிரைவேலன் துணை.

# முகவுரை.

அநாதி மலமுத்த பதியாகிய சிவபெருமான் தமது திருவருளால் புறச்சமயக் குறும்பயிர்களைக் களைந்து அத்துவித சைவசித்தாந்த வான் பைங்கூழ் செழித்தோங்குமாறு, அவ்வக்காலத்து நிலைமைக்குத் தக்கவாறு ஸ்ரீமத் பரமாசாரிய மூர்த்தி சுவாமிகளை விடுத்தும், பின்னர், சந்தான குரவரைவிடுத்தும் வழி வழியே, கல்வி கேள்விகளின் கரையைக்கண்டு கடவுளருட்பிரசாத முற்ற புலவர்கள் பலருள் இக்காலத்தே யாழ்ப்பாணம் ஸ்ரீ. ல. ஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் போயினபின், வைதீக சைவசித்தாந்த சண்டமாருதமாய, ஸ்ரீ. ல. ஸ்ரீ. சோமசுந்தர நாயகர் அவர்கள் தோன்றவும் பின்னர் வடமொழித் தென்மொழிப் பாஷாவிற்பன்னராகிய சதாவதானம், ஸ்ரீமாந், கதிரைவேற்பிள்ளையவர்களைத் தோற்றுவித்தும், அன்பர்களைக் கரையிலா உவகைக்கடலிற்றிளைக்கவும் வைத்தனர். அவ்வப்போதெழும் வாதங்கட்கு அஞ்சாது நின்று வாதிட்டு தமது பிரதிஞ்ஞையை நீதித்தலமுதலியவிடங்களிலும் நிலைநாட்ட நின்றதை யறியாதவருமுளரோ? இவர்களது அருமை பெருமைவாய்ந்த சில குறிப்புரைகளும், ஆன்றோர்க்கும் மிக்க நட்புடன் வாழும் ஞாலத்தார்க்குஞ் சமயம் வந்துழிஇப் பாடியருளிய கவிகளுள், பலவிதமாக கமலபந்தனம் கோபுரபந்தனம், இரதபந்தனம், இரட்டை நாகபந்தன முதலாயவைகளுஞ் சீட்டுகவிகளுஞ் சிலேடைவெண்பா, யமுகம் நிறைந்த கட்டளைக் கலித்துறை முதலிய பலவகைப்பட்ட யாப்பிலக்கணங்களுக்கிணங்குமாறு பாடியிருத்தலை யறியாத சில பாமரர்கள், செய்யுணடை தெரியாதென்றே செப்பித்திரிகின்றனர் நோக்குங்கால் உண்மை வெளிவரும், நிற்க, கருவூர் மான்மியஞ்செய்த வக்காலத்துக் கடைசியில், பதின்பொருட் சிலேடையாக ஒரு வெண்பாவும் பாடியிருக்கின்றனர். வருமாறு.

வாரம் வரலால், வருகுவனங் கோடலால்
சாரஞ் செரிதலாற் சார்கதியாற்-சீரகரு
வூரா றரனயன்மா லொண்டமிழ்வே தங்குரவர்
நேரரங் கும் பாபிடேகநேர், என்றும்

சீட்டுகவிகளுள், காஞ்சிபுரம் ஜமீன்தாரரும் ஸ்ரீ ஏகாம்பரேசுரர் ஆலயத்தின் தருமகர்த்தருமாகிய, கா, மு, சுப்பராயமுதலியார் அவர்கட்கும், பாலவனம் ஜமீன்தாரும் மதுரைத் தமிழ்ச்சங்க அக்கிராசனருமாகிய ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவர் அவர்கள்மீதியற்றிய வாகைப்பாட்டுடன் சில தனிப்பாடல்க

ளும், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனபண்டார சந்நிதிகளாகிய ஸ்ரீ. ல. ஸ்ரீ. அம்பலவாண தேசிகசுவாமிகள் அவர்களுக்கும், அநேக நியாயதுரந்தரர்களுக்கும் ஸ்ரீமான், வித்வசிரோமணி, சாமிநாத பண்டிதர் அவர்களுக்கும், ஸ்ரீமான். தெல்லியம்பதி, கதிரேசன்பிள்ளை அவர்களுக்கும் ஸ்ரீமான். இராஜரத்தினம்பிள்ளை யவர்களுக்கு மெழுதிய கவிகள் அளப்பிலயாதலால் விரிக்கிற் பெருகுமென்றஞ்சி விடுத்து, காஞ்சி, ஸ்ரீமான். கோவிந்தராஜுமுதலியார்க் கனுப்பிய பாடலி லிரண்டொன்றைமாத்திரம் எடுத்துக் காட்டத் துணிந்தனன். அவையாவது,

மண்டல மதிக்க விவ்வழக் கதற்கு மகிழ்வுட னுதவிகள் புரிந்த
பண்டிதர் தமக்கு யானொரு காலும் பாதகஞ் செய்திடே மவர்தாம் கணத்தும்
கண்டவர்க் கெல்லா மெனைவெறுத் துரைத்தல் கண்டுமியான் வெறுக்கிலேன்
தண்டமிழ்ப் புலவர்க் கினியவை யென்றுஞ் செய்குவ செய்குவேன் சாதம்.
சமைய வழக்கிற் புகுந்தாற் பகைவிளையும் பொருளிழப்புத் தானு நேரு
மமைய மெலாம் வீண்கழியு மலகையெனப் பிறர்பழிப்ப ரந்தோ நந்தஞ்
சுமையுடலு மடிவாங்கு முயிரொழியு மெனப்பயந்த சோம்பர் போனு
னமைவனெனிற் கேட்டிலதே யென்னுளந்தா னொருகணமு மையா வையா.
என்றுங் கூறியிருக்கின்றனர்.

மற்றையவைகளுட் சில மறந்தும், சில நண்பர்களிடம் இருப்பதினாலும் இத்தருணம் உதவாதாயினமையானும், அனைவோருடைய கவிகளைச் சேகரித்து வெளியிடவேண்டுமென்றோ ரவாவிருந்தும் நங்கூட்டத்தவர் செய்த மித்திரபேதக் கலகத்தாற் சவகாசமில்லாதாயின. ஓர்கால் பின்னர் திருவருள் கூட்டுமாகில் இப்பாடல்களையும், பிள்ளையவர்களாற் செய்யப்பட்ட சதாவதானச் செய்யுள் வரிசைகளையும் பின்னர் வெளியிடுவேன். நிற்க, மித்திரபேதமாவ தென்னெனில்,

ஆசிரியராங் கதிரைவேற்பிள்ளை யவர்களுடன் பழகிய மாணவர்கள் நால்வர்களுள் மிகுதியா யென்னை நேசித்துக் களங்கமின்றிக் கற்றுக்கொடுத்தது மன்றி, பலப்பல வெளியூர்க்கும், சிவபெருமானது திவ்விய க்ஷேத்திரங்களுக்கும், ஆன்றோர்களிடங்களுக்கும், பிரசங்கங்கட்கும் அழைத்துக்கொண்டு போய், தமக்குறூஉம் பரிசிற் சிலது தட்டாதீந்தும் பல்லோரிடமும் என்னைப் பற்றிகூறிக் கழிபேருவகையுடன் வாழ்ந்திருந்தமை.உள்ளூர்,வெளியூர்,பண்டிதருக்கும் என்னோடு பழகிய சகோதரராய மாணவர்களுக்கும் நன்கு தெரியும், ஆசிரியராம் பிள்ளையவர்கள் நானிழைத்த பக்குவமின்மையாற் றேகவியோகமாயினமைப்பற்றி பல நண்பர்கள் வேண்டுகோட் கிசைந்து சரமகவிக்காக உள்ளூர் வெளியூர் பாவலர்க்குத் தெரிவிக்கச் சிறியேனைப் பொருட்படுத்தித் தடைசெய்யாது என் விலாசத்திற்கு அனுப்பினர். அஃதை வெளியிடுவான். போந்தகாலத்து இச்சென்னையிலுள்ள ஒருவர் தாம் எதோ சில கவி

களைப்பார்த்து எழுதி உள்ளூரார் கவியுடன் விடுக்க, அஃதறிந்த யான் சிலரை விளித்து, ஷையார் கவிகளுள் நீக்குவதை நீக்கி, சிலதைமாத்திரஞ் சேர்க்க லாமெனக் கேட்கமாட்டேமென்றனர். பின்னர் விடுத்தேன், சிலதினம் பொறுத்து மிக்க நட்புடையார்போல்காட்டி யன்புபாராட்டிக் காப்பிகளை, பாலசரஸ்வதி ஸ்ரீமத் ஞானானந்தசுவாமிகளுக்குக் காட்டியபின் தங்கள்பா லனுப்புகின்றோமென்று புளுகிக் கேட்கச் சரியென வொப்பிக்கொடுக்க வாங் கிக்கொண்டுபோய் ஏழெட்டுமாதகாலமாகக் காலனுக்கத் திரியவைத்தனர்.

இச்சங்கதி வெளியூர் நண்பர் பலர்க்குந் தெரிந்திருக்கலாம். வருட முடி விலாவது வெளியிடலாமென்றிருந்தேன் நாளாகியது கண்டு பொருது வேறு சில நண்பரைக்கொண்டு சொல்லிப் பையவேவாங்கி காஞ்சிபுரம் முதலிய விடங்கட்கு அனுப்பித் தடைபட்டமையால் அங்கும்போய் நண்பர்களை யுத விபுரியவேண்டிப் பின்வாங்கிவந்து அச்சிற்குக் கொடுத்தும் சிலது கொடுக்கா துமிருக்குங்காலத்து, இரண்டு மூன்றுநாள் என்னுடன் திரிந்த சிலர் மெய்ப் பொருளுயனுர்ச் சரிதைக் கிணங்க கரவடமாய்ப் பேசியெவரோ அச்சி டக் கடுதாசி சகாயஞ் செய்யப்போகின்றார்களென்றும் எனக்கு அதிக இலா பத்தை யுண்டாக்குவதாகவும் அவர்க்குக் காட்டிவிட்டு இற்றைப்போதே தருகின்றேமென் றுறுதி கூறிப்போனவர், மற்றையநாள்வரைக்கும் அனுப் பாதும் என்னை பலவிதமாகப் பெரியோர்க் கிழித்துக் கூறி கேட்பவர் மனம் புண்படுமாறு அவதூறுகளைச்சொல்லிக் காலங்கழிப்பதைச் சகியாத யான் வஞ்சித்ததையறிந்து சில மத்தியஸ்தரைக்கொண்டு மூன்றுதினந் திரிந்து எம்பானின்றதொழிய மற்றையகவிகளுள், காஞ்சியினர் கவிகள்மாத்திரம் கைவரப்பெற்றேன் மற்றையதைக் கொடுக்கமாட்டேமென்றுங் கூறினர். வெளிக்கு ஆடம்பரங்காட்டியும் ஒன்றுஞ்செய்யாதும் பொய்யாகப் பத்திரி கையிற் பலவித உற்சவங்கொண்டாடுகின்றேனென்று வரைய என்மனம் வரவில்லை. ஆதலால் நண்பர்கள் செய்த மனக்கஷ்டம் பலவாதலால் வெளி வரத்தடையாயின, வெளியூர் புலவர்களது கவிகளை வஞ்சித்ததால் இவண் பிரசுரிக்கவில்லை மனவருத்தங் கொள்ளாவாறு பிரார்த்திக்கின்றேன் அவ சரத்தில் வெளியாக்கினமையால் சிறியேன்மீது குற்றம்பாராட்டாது. அன்ன மானது தம்முன் வைத்த அமுர்தத்தையும் நீரையும், உட்கொள்ளுங்காலத்து சத்தாயவமுர்தத்தை யுட்கொண்டு அசத்தாய நீரைப் பிரிப்பதுபோல் புலவ சிகாமணிகளுங் குணத்தையே கைக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். சுபம்.

இங்ஙனம்,

புரசை. பாலசுந்தரன்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சதாவதானம்.

# ஸ்ரீலஸ்ரீ. நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் சரித்திரம்.

## விநாயகர் வணக்கம்.

சீர்பூத்த சிவாகமமுஞ் சைவ வேடத்
திறமணுகி நற்சிவமே தெய்வமென்ன
நார்பூத்த தண்டமிழ் பைங் கூழோங்க
ஞானமுகி லேவந்த நலமேபோல
பேர்பூத்த புலோலிநகர்க் கதிரைவேற்
பிள்ளையவர் சரிதமிவண் பிறங்கநங்கள்
கார்பூத்த கணபதியாங் கருணைப் புத்தேள்
கடிமலரா முளரித்தாள் கருத்துள்வைப்பாம்.

## சுப்பிரமணியக்கடவுள் துதி.

தந்தையாஞ் சிவனுருப்பிற் சரியுறவே கொண்டுசேர வணத்திற்சார்ந்து
சிந்தவே யவுணருராஞ் சிதறுறவே வேற்றொடுத்த தெய்வமேயெம்
பந்தமறச் செய்கதிரை வேற்புலவ னற்சரிதம் பகரவிங்கு
முந்தவே யரணாக நிற்றிடுதல் நின்றன்கடன் முருகவேளே.

## சிவபெருமான் துதி.

ஐம்முகத்தா லைந்தொழிலு மழிவின்றி யேயுஞற்றி யன்பர்தம்மை
மும்மைவினைத் தெண்டிரையின் மூழ்கிமனங் கிடவாதே மோனவாரி
செம்மையினே பெய்தருளுஞ் சிவபெரும கதிரைவேற் செல்வன்சீர்த்தி
இம்மையெலாம் விளக்கமுற நல்லருளே செய்திடுவா யிறைவாயின்றே.

## உமாதேவி துதி.

அண்டமெலாம் புரந்தொடுக்கி நின்னாணை வழிநடத்து மம்மையேயெம்
பண்டைவினைக் கூற்றடக்க நின்னுருவத் தோற்றமெலாம் பாவியேற்குத்
தண்டமிழாற் பிரசங்க முஞற்றுகதிர் வேற்பிள்ளை தக்கோன்சீர்த்தி
கண்டியற்ற வெளியேற்கு நின்கருணை வழங்கலுமே கடனேயன்னே.

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் துதி.

வெம்பந்த மறுத்தடியர் வீடளிக்க வேணுபுரம் விளங்கத் தோன்றிக்
கும்பந்த தனமமுதா மெய்ஞ்ஞானமலைகொண்ட கோமானே நின்

சம்பந்தங் கொண்டுபுகழ் சாற்றியாங் குரவனவன் சரிதம்பேணச்
சம்பந்தா மலர்சரணந் தலையிருக்கச் சரணடைந்தேன் சாலமாதோ.

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி.

விடங்கொண்ட பரமேட்டி நீயடிமை யென்றோலை காட்டவேண்டித் [தி
திடங்கொண்டு கிழித்துபித்தா வென்றருளிப் பரவையர்க்காத் தேரூர்வீ
விடங்கரையே தூதனுப்பும் வித்தகரே யிச்சரிதம் விழைவாய்ப்பேண
மடங்கனிகர் வன்றொண்ட மாதேவப் பெருந்தகையே மகிழ்செய்வாயே.

---

## திருநாவுக்கரசு சுவாமிகள் துதி.

கன்மிதக்கக் கடலகத்தே காட்டியது நீற்றறையிற் கலங்காஞான
மின்மினிப்போற் கிடந்துதிரு வருட்பாவே சாலவுமே மிளிரச்செய்தோய்
கொன்மிறையாங் கதிரைவேற் கோமான்றன் சரிதமது குறைவிலாதே [வே.
பொன்மணியே காப்பையெனப் பொலன்றாளேசரணடைந்தேன்புகலூர்த்தே

---

## மாணிக்கவாசக சுவாமிகள் துதி.

ஆணிப்பொ னம்பலத்தா ரருள்வேட்டவ் வழுதிதரு மளவிற்செல்வம்
காணிக்கை யாகபெருந் துறைக்குருந்தின் றருவகத்தே காட்சியேற்ற
மாணிக்க வாசகனே நின்மாட்சி வழுத்திடுமெங் குரவனாரின்
பேணிச்சொற் சரிதமது பேணுவா யென்றடைந்தேன் பெருமாயின்றே.

---

## ஆசிரியர் துதி.

கொச்சகக்கலிப்பா.

கதியாரச் சைவத்தின் நீறுகண் டிகைகாட்டிக்
கதியார்ந்த கண்ணன்முதற் சிறவரெலாங் கண்டமுற்றே
கதியார்ந்தா ரெனக்கழறிக் கடையேனை யாண்டுருகன்
கதியார்ந்த கதிரைவேற் கண்மணிதாள் கருதுவமே.

---

உ

திருச்சிற்றம்பலம்.

கதிரைவேலன் றுணை.

சதாவதானம் ஸ்ரீலஸ்ரீ. யாழ்ப்பாணம்,

# நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் சரித்திரம்.

அகண்டபரிபூரண, நித்தவியாபக, நிற்கள, நிர்மல, நிரதிசயானந்தப் பரம் பொருளாகிய, பசுபதியுடன், பழத்திற்சுவைபோலவும், மணியிலொளிபோல வும், கண்ணிலொளிபோலவும், அபேதமாயிலங்கி, ஒளிராநின்ற அகிலாண்ட கோடிகளனைத்து முள்ளனவாய ஆன்மாக்களைக் கருணையென்னும் வாரியைப் பொழிந்து வளர்க்கும் ஸ்ரீ பரமமாதாவாகிய அன்னையாம் அம்பிகையாரின் அருளெனும் ஞானவமுதுண்ட கலியுகவரதனுங்கந்தக்கடவுளே ஸ்ரீ திருஞா

ஞசம்பந்தசுவாமிகளாகத் தோணி புரத்திற்றோன்றி புறச்சமயக்குறும்பயிர்
களைப் போக்குவானும், அளப்பிலா உயிர்கட்கு அரிய முத்தியளிக்கவும்
எம்மையெலாம் உவகைக்கடலிற் றிளைத்து கரையேற்றக் கருணைபூத்து
திருவாய்மலர்ந்தருளிய பலவகைத்தாய *திருவருட்பாக்களை யணிந்தொளி
ரும் பலதலங்களுக்குள் திருக்கோணவரையும் திருக்கேதீச்சரமுந்திகழப்பெற்
றதாய் கதிரைவேற் பெருமான் கண்ணியகோயில்கள் கதியுறவான்றோர் பதி
யெலாமுறூஉம் பான்மையதாய், அமிழ்தினுமினிய தமிழணங்கினுக்கோர் அரு
ம்பெரும்பீடமுமாய், இயலிசை நாடகமுத்தமிழ்க்கடலை முழுவதூஉமுண்ட
மூதறிவாளராயும் நித்தியஞ்சத்திவேலனைநினைவுடனேத்தும்பத்தியேகொண்டு
உத்தமப்புலவர்கள் ஒளிருமிடமாயும், மற்றைய நீர்வளநிலவளங்களைச் சாலவு
முற்றதான இமிழ்திரைவேலை சூ ழீழமண்டலத்திலே மேதாவியர் வாழ்மே
லைப்புலோலியிலே வேளாளகுலத்தே மழவர்குடியிலே நஞ்செந்தமிழ் நாட்
டின்கணுள்ள, சமயம் பலவற்றுள் பொய்ச்சமயமெலா மொரீஇ மெய்ச்சமய
மாம் வைதீகசைவசமயமே மேலானசமயமெனப் பலவித வேதாகமசுருதி பிர
மாணங்களிருத்தலைச் செவிநயக்கக்கேட்டு அவற்றையே யுண்மையெனக்
கொண்டொழுகியும் உய்யுமார்க்க மீதெனக்கண்டு, புதுச்சந்நிதிவாழ் புனித
னாங் கந்தசுவாமியின் றிருவருள் பொருந்தவேகொண்டு,கோயிற்றருமகர்த்தத்
துவம் பூண்டு அல்லும்பகலு மடிமைத் தொழும்புபுரிந்து அன்பையே இன்
பெனக் கொண்டொழுகும், நாகப்பபிள்ளை யென்பார் நல்லறமென நவிலும்
இல்லறத்தை நண்ணி நடாத்துநாள். தமக்குப் பன்னெடு நாளாயும் ஓர் ஆண்
மகவின்மையால் தந்தலமணியாங் கதிர்காமக் கதிரைவேற் பெருமான் சந்நதி
யண்மிக் கருணைமிகுந்துயர் அருணகிரியார் அருட்டிருப் புகழையும் அலங்கா
ரத்தையும் அன்புடனோதிக் கனிந்துருகி பணிந்துகிடப்பவும் "அடியார்க்கெ
ளியனாகிய ஆறுமுகத்தண்ணல் அன்றிரவே கனவின்கண்தோன்றி ஐய? அஞ்
சற்க அகமிகமகிழ்ந்தேம், எம்விரதநாளாகிய சஷ்டியைப் பன்னியுடன் அன்
புடன் போற்றி வருதி எண்ணிய வெண்ணம் விரைவில் முந்தும் நுங்க
ளில்லம்போ மின்களெனச் சொல்லி மறையவும், நனவுகொல்லோ கனவு
கொல்லோ வென்றெழுந்து திடுக்கிட்டுச் செவ்வேளின்றிருநாமங்களைச் செம்
மையுறத் துதித்துமுற்றிய பின்னர் ஆண்டவனுராணைப்படித் தம்இல்லந்திரும்
பித் தாரணியில் வாழுந்தக்கோ ரனுட்டிக்கும் விரதங்களிற் றலைமையாய
சஷ்டிவிரதத்தை நியமப்படி யனுட்டித்துவரவும்.

பின்னர் அன்னப்பிராசனம் சௌளம், முதலிய சடங்குகளும் அவ்வப்
போது மிக்க சிறப்புடன் செய்யப்பட்டு வளருவாராயினர். ஐந்தாமாண்டில்
வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று சிறுவர்களுடன் கல்வித்திறங்கற்பிப்பதில்
வல்லுநராயிருக்கு நாளில், தனதருமைத்தாயார் சிவலோகப் பதவியடைய
ஆற்றொணாத் துயரமேற்கொண்டு தந்தையுடனின்று செய்யவேண்டிய கடன்
களியாவுஞ் செவ்வையினே நடத்தியபின் நகரிலுள்ள வைதிகசைவசித்தாந்த
பானுவாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் வித்தியாசாலையிலும் மேற்படி

யார் மாணாக்கரிலொருவராகிய யாழ்ப்பாணத்துநல்லூர் மகாவித்வான் ஸ்ரீமான். கா தியாகராசப்பிள்ளை அவர்களிடத்திலுங் கல்விகற்பாராயினர்.

இவர்களிடத்தில், நீதிநூற்களையும், நிகண்டு முதலிய மற்றைய வைகளையும் கற்குங்காலத்திற்றானே செந்தமிழ்க்கல்வியை நிரம்பக்கற்றல்வேண்டு மென்னும் பேரவா அவர்கள் உள்ளமெனுங் கூடத்தினின்றலவவும், அண்ணாமலைவெண்பா, சிதம்பரவெண்பா, புலியூர்வெண்பா, நீதிநெறிவிளக்கம், நளவெண்பா, முதலிய வெண்பாக்களும்.

பழமலையந்தாதி, மறைசையந்தாதி, முதலிய அந்தாதிகளும், சோணசைலமாலை பதிற்றுப்பத்தந்தாதி இவைகளும் பொருள் கேட்கத்தொடங்கி முற்றிய பின்னர், நைடதம், காசிகாண்டம், சிவதருமோத்தரம், பாரதம் இராமாயணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், கோயிற்புராணம், திருச்செந்தூர்ப்புராணம், பேரூர்ப்புராணம், திருவானைக்காப்புராணம், சிவராத்திரிபுராணம், கந்தபுராணம் தணிகைப்புராணம் சிவசங்கிதை, வாயுசங்கிதை, சங்கரசங்கிதை, முதலிய அநேக கிரந்தங்களையும், தர்க்கம், வியாகரணம் இவைகளைச் சரியுறக்கற்றுத்தேர்ந்ததுமன்றி, சித்தாந்த சாத்திரத்துட் சிவப்பிரகாசம், இருபாவிருபது, சித்தாந்த சிகாமணி, திருவருட்பயன் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலாயதுடன் பிரமாணதீபிகை, பிரசாததீபிகை, சிவயோக சாரம், முதலியதுடன் நன்னூல், அகப்பொருள், புறப்பொருட்பாகுபாடுகள் குறிஞ்சி, வெட்சி, முதலிய திணைப்பாகுபாடுகள், வெண்பா கட்டளைக் கலித்துறை முதலிய பாவகை பாவினம், அலங்காரவகை முதலியதுடன் கருவியிலக்கணம், பண், வண்ணப்பகுதி, வரிப்பகுதி, தத்துவம், முப்பொருளிலக்கணம், இயலிசை நாடகவிலக்கணங்களுஞ் சித்திரக்கவியின் பாகுபாடுகளும், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை வளையாபதி, குண்டலகேசி அன்பிணைந்திணை, கல்லாடம் தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு. கலித்தொகை, பத்துப்பாட்டு இலக்கணவிளக்கம், வீரசோழியம் முதலாய அரியபெரியசங்கநூலுட்பொருள்யாவையும் ஐயந்திரிபு மயக்கமாங்குற்றமொரீஇக் கற்றுத்தேர்ந்து பாண்டித்யம்வாய்ந்த பண்டிதர் கழகஞ்சார்ந்து வேதாகமமோக்த சைவசித்தாந்த சாத்திரச்சோனைமாரிபொழியும் ஆற்றலுடையாராய் தக்க ஞானாசிரியராம். வேதாரண்யம் ஆதிசைவக் குருக்கள் மாரிடமணுகி, வாசகதீக்கையுடன், சமயதீக்கை விசேடதீக்கை முதலிய தீக்கையுற்று நீறக்கமேன்மையே நியமமாக்கொண்டு வாழ்ந்திருந்தனர்.

## பிள்ளையவர்கள் விவாகச் சடங்கு.

இவ்வாறு நிகழுங்காலத்தே பருவகால முதயமாகவும். ஸ்ரீமந் கோவிந்தப்பிள்ளையவர்கள் குமாரத்தியாகிய வடிவாம்பிகையெனுங் கற்பரசியை வதுவைச் சடங்குளுற்றி இல்லறத்தருமம் இனி நீடேறக் காட்டுவான் வதிந்து வனசமும் நீருமென வாழ்ந்து புத்திரப்பேற்றையுன்னி, அண்டசராசரத்துற்ற ஆன்மாக்களையெலாம் தமது திருக்கடைக்கண் சாத்தி கருணையெனும் வாரியைப்பொழியும் பரமமாதாவாகிய உமாபிராட்டியாரை விளித்து, பன்

னுள் தோத்திரித்துத் துதித்துவரவும் தந்தையின்து வுருவெலாம் ஒருங்கே கூடி யுதித்தாற்போல ஓர் பெண்மகவாய் வந்துதிக்க மகவினதுபேர வாவால், அம்மகவை வாரியெடுத்து முத்தமிட்டு உச்சிமோந்து அம்பிகையினது காரணத்தால் வந்ததுபற்றிச் சிவஞானம்பிகை யெனப் பெயரிட்டு வளர்த்துவருநாளில்,

## பிள்ளையவர்கள் சென்னை யடைந்தது.

சென்னையிலுள்ள சில நண்பர்கள் இவர்களது புத்தி சாதுர்த்தியத்தையுங் கல்வித்திறத்தையுங்கேட்டு பலவித நிருபம்விடுத்து வரவழைக்கத்தட்டாதும் மன்னனுக்குத்தன்தேச மல்லாற் சிறப்பில்லை, கற்றோர்க்குச்சென்ற விடமெல்லாஞ் சிறப் பென்ற செய்யுளையு முணர்ந்து பிறந்தநாட்டில் உண்டாகுங் கௌரவத்தைப் பார்க்கினும் இருமடங்காக அன்னியநாட்டிலுண்டாகுமெனக் கருதித் தந்தை தமையன், தமர் மாதுலர் முதலாயவர்களை நீக்கி இற்றைக்குச் சுமார் 13 வருடத்திற்கு முன்னரே சென்னையடைந்து புரசைக்குவந்து வதிந்தனர்.

## உத்தியோகச் சிறப்பு.

இவ்வாறிருக்குங்காலத்தே, ஏகாதசிபுராணம், சிவக்ஷேத்ராலயஉண்மை விளக்கம், கதிர்காமக் கலம்பகம், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணசார வசனச்சுருக்கம், முதலாய நூல்களைத் திருத்தியும், புதுக்கியும் அச்சிட்டிருக்குங்காலத்தே, சென்னை பச்சையப்பன் காலேஜிலும், சென்னை கிருஸ்டியன் காலேஜ், மயிலை, சென்ட்தோம் காலேஜ், வெஸ்லிகாலேஜ, சிந்தாதிரிப்பேட்டை ஜயின் ஐஸ்கூல், முதலாய விடங்களில், உயர்ந்தவகுப்பின் பிள்ளைகட்கு அரியபெரிய இலக்கியவிலக்கணங்களைக்கற்றக் கொடுத்துவந்ததுடன் நற்சாட்சிப் பத்திரமும் பெற்றிருக்கின்றனர்.

## முதற்சைவபூஷணசந்திரிகை வெளியிட்ட சிறப்பு.

சென்னையிற் பல்லோர் பலவிதமாகப் பேசி, பின்ன தணிவது இன்னது விடுவதென்னும் வழக்கை விடுத்து தெய்வம் எல்லாம் ஒன்றென்றும் எதையணிந்தால்தானென்ன. அணியாவிட்டால் தானென்ன தெய்வம் கோபிக்குமாவென்று வாய்மதம் பேசி வாளாக் காலங்கழித்து மீளாநரகிற்காளாகும் மாக்களைக்கண்ட ஸ்ரீலஸ்ரீ. வைதீக சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தரநாயகர் அவ்வப்போது கண்டித்து வெளியாக்குங் கண்டனங்கள் மிகப்பெரிதாயும், விலையதிகமாயும் எவரும் கொள்ளக்கட்டமாக விருப்பதுபற்றி யோசித்த ஸ்ரீமந். வக்கீல், மாசிலாமணிப்பிள்ளை B. A. B. L. அவர்கள் பிள்ளையவர்களை யழைத்து விபூதி உருத்திராக்கத்தின் பெருமைகளையும், தோன்றுமுறைமைகளையும், தரிக்கும் விதிகளையும் அவற்றாலுண்டாகும் பயன்களையுந் திரட்டி சுலபமாக எவரும் எளிதிலுணருமாறு வெளியிட பொருளுதவியைனத் தும் நானே செய்கின்றேனென அஃதேபோல் வடமொழி தென்மொழிமேற்கோள்களுடன்சத்கிரந்தநூலைவெளியாக்கினர்.

## தமிழ்ப்பேரகராதியும், கூர்மபுராண விருத்தியுரையும் வெளியிட்ட சிறப்பு.

மணிகடற் சலவிம் மாநிலவரைப்பில் தமிழ்மொழியைப் பயிலுமன்பதரனைவர்க்கும் இன்றியமையாச் சிறப்பினதாகவும், அநேகரால் வெளிப்படுத்திய சதுரகராதி; யாழ்ப்பாணத்து மாணிப்பாயகராதி; விரிவகராதி, முதலிய வகராதிகளில் அடங்கியிருக்கின்ற சொற்களுடன் நூதனமாக அரியபெரிய இலக்கிய விலக்கணங்களினின்றும் எடுக்கப்பட்ட அநேகஞ்சொற்களை முறைப்படிசேர்த்தும். அச்சொற்களுக்கு ஆங்காங்கு நட்சத்திரப் புள்ளிகளமைத்தும் பெயரகராதியில் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று, எவல்வினைமுற்று வியங்கோள் எவல்வினைமுற்று குறிப்புவினைமுற்று உரிச்சொல், முதலிய வேறுபாகுபாடுகளைக் கற்கவிருப்புறுமாணவர் எளிதில்உணருமாறும் பல்வித்வஜனர்கள் சந்தோஷிக்குமாறுமியற்றி வித்தியாரத்நாகரம் பிரஸிலும் கிரஞ்சனவிலாச அச்சுக்கூடத்திலும் பதிப்பித்து வெளியாக்கியதன்றி, சிவபரத்துவ மிளிரும்படிச் சொல்நயம், பொருணயம்தேங்க ஸ்ரீ. அதிவீரராம பாண்டியனூர் செய்தருளிய கூர்மபுராணத்திற்கும், செந்தமிழ்ப்புலவரெலாம் செவிநயப்புறுமாறு அவற்றிலடங்கிக்கிடக்கும் அநேக தத்வார்த்தங்களை யெவ்வெவரும் எளிதிலுணருமாறு சஞ்சிகைப் புத்தகங்களாக வெளிப்படுத்துங்கால், பிரசினர்க்கும் மற்றையோர்க்கு நேர்ந்த அசந்தற்பத்தா லவையம்மட்டிலேயே நிற்கலாயின.

## மாயாவாத தும்சகோளரியென்று பட்டம்பெற்றது.

வைதீக சைவசித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தரநாயகர் அவர்கள் புல்லறிவாளரால் நிகழும் சமயதூடணை சாத்திரதூடணை முதலாயவைகளை அவ்வப்போது வடமொழி தென்மொழிக்கணுள்ள ஆதாரங்கள் யாவும் மிளிரகண்டன புத்தகமாக சுமார் 90 சத்கிரந்தங்களைச் சிரமம்பாராது இயற்றி வெளியாக்கிக் கண்டித்து ஆணேறுபோல் நின்றுலவுங்காலத்தே முற்பயனுல் சற்றுதேக அசௌக்கியமடைந்ததைச்கண்ட தாமே பிரமமென்றகங்கரித்துத் திரியும் மாயாவாத குழுமிகளனைவரும் தலைநிமிர்ந்து புறங்கூறவுந், தூடணையைக் கேட்டுச் சகியாதமெய்யன்பர்களனைவரும் நாயகரிடம் முறையிடவும் தமக்கு நேர்ந்திருக்கும், ஆபத்தை நினைத்துஐயகோ என்செய்வல், சிவபரஞ்சுடரின் திருவிளையாட்டிவ்வாறுயினவே, தக்கபிரமாணங்களைத் தீட்டி நிலைநாட்டுதற்கு யெவரைத்தேடிக் காண்பேமென பெருங்கலக்கமுற்றிருக்குங்காலத்தே, இவர்கள் கல்வித்திறமை வதிந்திருக்கும் பெருமையெலாங் கேட்டக மிகமகிழ்ந்த ஸ்ரீமர். நாயகர் அவர்கள் எமதாசிரியராம் பிள்ளையவர்களை யழைத்து சொல்லவேண்டுவன வற்றைச்சொல்லி சிலபுலவர் தெரிந்த நியாயங்கள் பூர்வபக்கிகளுக்குக் காட்டினுழு மொவ்வாது கலகஞ்செய்கின்றனர் ஆதலால் தங்கட்கும் சிறுவயதானதால், கபடர்களது மாயசூட்சிக்குடன்படாது நின்று தக்கபிரமாணங்களைக்கொண்டு வாயடங்

கச்செய்வது கடமையென அவற்றைத் தட்டாது சிரமேற்றியிருக்கவும், சைவத் திருக்கூட்டத்தினரையும் மற்றையோரையும் விளித்துச் சொல்ல வேண்டுவனவற்றைச் சொல்லி அவர்கள் மனமுமொருப்பட விளம்பரமிட்டு உபந்நியாசம் வைக்கும்படியனுப்பினர். உடனேயடுத்த ஆதிவாரமே சென்னைச் சிந்தாதிரிப்பேட்டையில் உபந்நியாசஞ் செய்யப்போவதாகவும் அதுகாலை ஆக்ஷேபனையுள்ளார் வந்து சபையாரது அநுமதிபெற்று தருக்க இலட்சணமுறையே நின்று வாதிடவரக்கடவரென்று விளம்பரமிட்டதைக்கண்ட பூர்வபக்கிகளாம் மாயாவாதிகள் ஒருங்கேகூடித் திடீரென அவைக்கண்வந்து கலகம்விளைக்க, சபையினர் அப்புறப்படுத்தினர். நாணமுற்று வெளிச்சென்று அடுத்த ஆதிவாரமேபூர்வபக்கிகளெலாங் கூடியோசித்து சிந்தாதிரிப்பேட்டை பட்டுநூற்காரர்பஜனைக்கூடத்தில் கூட்டம்கூட்டி ஸ்ரீமந் நா. கதிரைவேற்பிள்ளையவர்களே வாதிக்கவரக்கடவரென்று விளம்பரமிடக் கண்ட ஆசிரியர் திடசித்தங்கொண்டு சைவத்திருக்கூட்டமும், புலவர்களுமாகச் சூழப்போய், நின்று எம்முடன்வாதிப்பவர் நுங்கட்சியிற்றேர்ந்தவர் எவராவதுவரலாமென பூர்வபக்கிகள் யோசித்து அதுகாலைவந்திருந்த ஒருவரை நியமிக்கவும் பிள்ளையவர்களும் ஒப்பி அன்னவர்வினவியவினவுக்கு விடையளித்தும் தக்க பிரமாணங்களைக் காட்டியும், வாதிடமூன்று வாரமாகியும் முடியவில்லை, பின்னர் கடைசியாக நான்காம்வாரத்தில், எமதாசிரியர் அவர்கள் வினவுக்குப் பதிலிறுக்க வழியின்றி விழித்து தலையிரக்கங்கொண்டதைக் கண்ட சபையினரெலாங் கரகோஷடஞ்செய்து தோல்வியுற்றனரென்ன மேற்படியார்கள் பலவித தூடணைகளைப் புகன்றுகொண்டே வெளியாயினர். இதுகண்ட உண்மைச் சிவநேயமுடையார் பலரும் வெளியூர் உள்ளூர் வித்வசிகாமணிகளுங்கூடி, திருப்பரங்கிரியினின்று விஜயஞ்செய்திருந்த ஸ்ரீலஸ்ரீ. செந்திநாதய்யசுவாமிகளையே அக்கிராசனாதிபதியாக்கி பிள்ளையவர்களுடைய புகழையெலாம் எடுத்துக்காட்டி மாயாவாத தும்ஸகோளரியென்னும் பட்டத்தைக்கொடுத்தனர் இவைநிகழ்ந்த வருடம் 1897.

## அத்துவிதசித்தாந்த மஹோத்தாரணரென்னும் பட்டம்பெற்றது.

ஆரணி ஜாகீர்தார் அவர்கள் செல்வக்குமாரருக்குக் கல்விகற்றுக் கொடுக்கும்படியாயும் சமஸ்தானவித்துவானுமாக பிள்ளையவர்களை யேற்படுத்த அவ்வாறேயுடன்பட்டு பிரதிதினமும் போய்க்கொண்டு வருங்காலத்தே ஓர்நாள் உத்தரதேயத்திலிருந்து சமஸ்கிருதத்தில் வல்லசாத்திரியார் ஒருவர் தாம் அத்துவிதியென்று நடிப்பைக்காட்டி, அரசனிடம், ஏதோ சில விடயங் கூறவந்தனர் அரசனும் தாம் வாசித்துக்கேள்விகேட்டிருக்கும் வல்லபத்தால் சாத்திரியார் வினவும் வினக்கட்கு மறுத்திருக்குங்காலத்தே தமது சமுகவித்துவானாகிய பிள்ளையவர்கள் வருகையைக்கண்டழைத்து பண்டிதரே? இச்சாத்திரியார் ஏதோ சில போக்குகளைக்காட்டித் தடுக்கின்றார் அவர் கேட்கும் வினக்களுக்குத் தக்கவிடை கொடுங்களென அவ்வாறே பலஜனர்சூழ்மியவக்காலத்தே சாத்திரியார் வினவும் வினக்கட்குத் தக்கபதில்

கூறி, வாயடங்கச்செய்தனர் ஜாகீர்தார் அவர்கள் வியப்பெய்தி மிக்க சந்தோடக் கடலிற்படிந்து அத்துவித சித்தாந்தத்தை நிலைநாட்டும் போராற்றல் உடையரானபடியால் இதுமுதல் உமக்கு, அத்துவிதசித்தாந்த மதோத்தாரண ரென்ற பட்டங்கொடுத்தே மென்றனர்.

## சூளும்பேடு ஜமீன்தாரிடம் வித்துவானாகவிருந்தது.

இவ்வரிய பெருங்காரியங்களை முற்றிலுமுணர்ந்த ஸ்ரீமாந். முத்துக்குமாரசுவாமி முதலியார் B. A. அவர்கள் ஸ்ரீமாந். வக்கீல். மாசிலாமணிப்பிள்ளை அவர்களிடஞ்சொல்லி பிள்ளையவர்களை வரவழைத்து இதுமுதல் எமது சமுகத்திற்கு வித்துவானாக விருந்துகொண்டு எமது குமாரர்களுக்குச் செந்தமிழ்ப் பாஷை நிரம்பக் கற்றுக்கொடுத்து பண்டிதராக்கவேண்டிய கடமையென்ன அவ்வாறே யொப்பி நடந்துவருவா ராயினர்.

## விட்டுணுவும் விபூதி ருத்தி ராக்கதாரணரேயென்று நிலைநாட்டியசிறப்பு.

வைதீக சைவசித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ. நாயகர் அவர்கள் சிவபெருமான்றன் அத்துவித முத்தியடைந்தமையைக்கண்ட கரையாங்குட்டை ஸ்ரீமாந் ஏகாங்கியார் அவர்கள் இந்நாயகர் இருக்குங்காலத்து எவ்வித சிவதூஷணைச் செய்யினும் அவ்வப்போதெலாம் கண்டன வாளாற் கண்டிக்கப்பட்டனர் நாயகர் அவர்கள் சென்றதும் இனியெவர் மறுக்கப்போகின்று ரென்று திடங்கொண்டு விபூதியைப் பிணச்சாம்பலென்றும் உருத்திராக்கத்தை இலந்தங்கொட்டையென்றும் சிவபெருமானையும் வழிபடும் அடியவரையும் மனம்போகுமாறு தூஷித்துமீளா நரகிற் காளாகுவான்கண்ட உண்மைச் சிவநேயமுடைய நண்பர் பலர்கூடி மறைகணிந்தனைச் சைவநிந்தனை போறமனழந் தறுகணைம்புலன்களுக்கேவல் செய்யுறச் சதுநம், என்று திருவாய் மலர்ந்தருளிய இரண்டாஞ்சம்புவாகிய ஸ்ரீநந்தியெம்பெருமானது பதினாறுபேறைச்சிந்தித்து பரிகரிப்பதற்கு எவருளரென்று பல்லோரிடமணுகி யோசிக்க உண்மைச்சிவநேயமும் உறுதியும் உடையார் இவ்வத்துவித சித்தாந்தமதோத்தாரணரும் மாயாவாத தும்ஸகோளரியுமாகிய நா. கதிரைவேற்பிள்ளையன்றி வேறில்லையெனத் தீர்மானித்து பிள்ளையவர்களைவேண்ட அவர்களும் பெருமானது தூடணைகளைக் கேட்டுச் சகித்திருப்பேமானால் முற்காலத்தே தக்கனெனுமவன் சிவபெருமானுக்கு விரோதமாக தூடணைச்செய்து வளர்த்த யாகத்திற்கு அவிர்ப்பாகங்கொள்ளுவான் போனபுலவரும் மனைவியரும் வீரபத்திரக் கடவுளால் பட்ட தண்டனை யளவிடற்பாற்றோ? பின் ஆயிரத்தெட்டண்டமும் ஆளுந்திறமே பெற்றவனாகிய சூரபன்மனால் ஆயிரம்வருடம் மச்சங்களைச்சுமக்கவும் அப்பாதகனிடும் தண்டனைக்குடன்படவுமாக முடிந்தது அந்தந்தோ அவ்வப்போதே கண்டித்தொழிக்க வேண்டுமெனக் கூட்டத்தினரும் இசையவிட்டுணுவும் விபூதிருத்திராக்கதாரணரே என்று மகுடமிட்டு வேதாகமோபப்டதபுராண இதிகாசமிருதியாதி பொதுப்பிரமா

ணங்களாலும் அவர்க்குச் சிறப்புநூலாகிய நாலாயிரப்பிரபந்தத்துள்ள "கரிய மேனி மிசைவெளியநீறு" தவளப்பொடிகோண்டும், தமரணிநீறுகோண்டும், நீறுசெவ்வேயிடக்காணில், காப்பிடவாராய், உடையார்நீதவாடையன், கண்டிகையன் என்பனமுதலிய செய்யுட்கள் மலிந்திருப்பனவற்றை யெடுத்துக்காட்டி வலியுறுத்தியுங் கேளாது சிலவைணவர் உருத்தெழுந்து 1901௵ ஜூலைமீ 7உக்குச் சரியான பிலவ௵ ஆனிமீ 26 தேதி புரசைக்கணுள்ள சீநிவாசப்பெருமாள் கோயிலிலே ஏகாங்கியாரவர்களைச் சபைத்தலைவராக்கி அதுபோதுவாதிட வலியுள்ளோர் வருகவென்னக்கூவி விளம்பரமிட அவற்றைக்கண்ணுற்ற ஆசிரியர் அச்சமிலாது அவைக்குச்சென்று ஏகாங்கியாரைநோக்கி, இதோவந்திருக்கின்றேம் எம்முடன்வாதிப்பவர் எவரென் ஏகாங்கியார் ஒன்றுஞ்சொல்லாது மௌனமுற்றிருந்தனர் அவையினரும் ஏகாங்கியார் தான்வாதித்தல் வேண்டுமெனக் கூடாதென்று ஓர் அந்தகரை விளித்துக்காட்ட அந்தகரோடுவாதிடுதல் தருக்கத்திற்கு நியாயமல்ல பின்னர் பலவிதமாகப் பேசுவர்: ஏகாங்கியாரே முன்னின்றால் நலமெனச் சற்றேனும் பதில் கூறுதிருந்தனர் சபையை விளித்து இவ்வேகாங்கியார் எம்முடன்வாதிட்டால் என்னவாகுமோவென்று பயந்து சிலரைப்போல் வாராதுநின்று விடுவானென்று கருதியே விளம்பரமிட்டனர்போலும் வாளாக்காலங்கழிக்கின்றனரே ஜனங்கட்குங் கஷ்டமாக விருக்கின்றதே யாம்போவது ஏகாங்கியாருக்குச் சம்மதமோவென வாய்மூடியே யிருந்தனர் சைவக்கூட்டத்தினரெலாங் கரகோட்டஞ்செய்து ஆசிரியருடன் வெளிப்போந்து அடுத்தவாரமே சபைகூடுவதாக யோசித்து புரசை வித்தியாவிலாசமண்டபம், பக்திமந்திரநிலயம், கங்காதரேசுரர் ஆலயமண்டபம், கல்விமடம் தொண்டைமண்டலக் கலாசாலைமுதலிய பல இடங்களிலும் 1902௵ ஜனவரிமீ இறுதியாக ஏழுமாதங்காறும், விவாதசபைகூட்டப்பட்டு பலநியாயங்களைக்காட்டி நிலைநிறுவவும் அதுபோதும் ஏகாங்கியாராவது, குழாத்தினராவது வாதிக்கவந்தாரல்லர், சில பாஞ்சராத்திரப் பூர்வபக்ஷிகள் சிலமாயாவாதிகளைத் துணையாகக்கொண்டு சிவசமய சிவசின்ன, சிவாகம சிவனடியார் தூஷணைகளையும் ஆசிரியரையும், சபைகளையும், அடுத்தாரையுங்குறித்து வாய்க்குவந்தபடி பொய்யாக வரைந்து துண்டுப்பத்திரிகைகள் வெளியிட அவைகளுக்கெலாம் அவ்வப்போது ஆசிரியர் அவர்களாலும் பல புலவசிகாமணிகளாலும் கண்டிக்கப்பட்டதுமன்றி அவ்வப்போது விடுத்த கண்டனவிளம்பரமும் வருமாறு,

விஷ்ணுவும் விபூதிருத்திராக்கதாரணரே
திராவிடவேத விபரீதார்த்த திரஸ்காரகண்டனம்
அரங்கேற்றுபாசம்
சைவபூஷண சந்திரிகைசயச்சிறப்பு
விவாதமத்தியஸ்த பத்திரம்வெளிப்படுத்தினுர்க்கோர் நல்விடை
சென்னைமகா வித்வஜனசபை
போலிவாதிகளுக்குப் புத்திபுகட்டல்

பாஷண்டபிடாலம் பதூஷண குஞ்சரபஞ்சானனம்
சிவோ பாலம்பனதிமிர பாஸ்கரம்
வாதத்திற்கு பயந்தொளித்தவர்க்கோர் வாயசப்பு
நீறுஎன்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம்
கண்டிகையகர்த்த கானனகுடாரி
சைவபூஷண சயத்துவஜம்.

என்பனமுதலிய பற்பலபத்திரிகைகள் வெளிப்படுத்தப்பட்டன. கண்டு அஞ்சியும், சென்னை நகரசபாமண்டபத்திற் சபைகூட்டினால் வருவேம் என்றபடி 1902 ஞு பிப்ரவரிமீ 16 தேதிக்குச் சரியான பிலவஞு மாசிமீ 5உ ஞாயிற்றுக்கிழமை சென்னை வேணுகோபாலசுவாமி அரங்கத்தில் ஓர் மகா விவாதசபை, கூட்டப்பட்டது பலபாஷா விற்பன்னர்களும் நியாயதுரந்தரர்களும் ஆரியதிராவிட வித்துவசிகாமணிகளும் ஆயிரங்கணக்காகவரவும் வைணவரும் பலர் வந்தனர்.

அம்மகாசபையார் பிரேரேபித்தபடி அத்தியாச்சிரம பாலசரஸ்வதி ஸ்ரீலஸ்ரீ. ஞானனந்தசுவாமிகள் அவர்கள் அக்கிராசனதிபதியாய் வீற்றிருந்தனர். அதுபோது, ஸ்ரீமாந். பாம்பன்குமரகுருதாச சுவாமிகள் முதலானவர்கள் நாலாயிரப் பிரபந்தத்திற்கூறிய, நீறு, சாந்து, பொடி காப்பு, கண்டிகை, அக்கீவடம் முதலிய சொற்களுக்கு ஆசிரியர் அவர்கள் கூறிய விபூதிருத்திராக்கங்களே முக்கிய பொருளேயன்றி வேறில்லையென முடிவுகூறி முடித்தனர். பின்னர் இவற்றையெல்லாம் ஒருங்கே திரட்டியும் அநேக அரியபெரிய பிரமாணங்களைச் சேர்த்தும் சைவபூஷண சந்திரிகையெனப் பெயர்கொடுத்து வெளியாக்கி யரங்கேற்றினர்.

## பிள்ளையவர்களால் வெளியிட்ட நூல்கள்.

சிவக்ஷேத்ராலய உண்மைவிளக்கம், கதிர்காமக்கலம்பகம், ஏகாதசிப்புராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணசாரவசனம் நாராயண மந்திரத்தின் தத்வார்த்தவிளக்கம், சிவராத்திரிபுராண விருத்தியுரை, திருவருணைக்கலம்பக முதற்சஞ்சிகை, நைடதநிருத்தம், பிரபுலிங்கலீலை, அருணசலபுராணத்திருத்தம், சித்தாந்தசார சங்கிரகத் திருத்தம், பழநித்தலபுராணவிருத்தியுரை, முதலிய நூற்களை வெளியாக்கிக் காலங்கழிப்பாராயினர்.

## பழநித்தலஞ்சென்று புராணம் அரங்கேற்றிப் பரிசுபெற்றது.

இப்பழநித்தலபுராண விருத்தியுரை 15 தினத்தில் இரவும் பகலுமாகக் கஷ்டப்பட்டு முடிக்கவும் புத்தகம் அச்சிற்பதித்தவரும்யாமும் ஆசிரியருமாக மூவரும் இலட்சுமி, காமதேனு, சூரியன், பூமிதேவி, அக்கினிதேவன் முதலியோரால் பூசிக்கப்பட்டவக்காரணத்தால், திருவாவினன் குடியென்னும்பெயரினையுற்ற பழநிப்பதிக்குச் சென்றிருந்தோம். அதுகாலை சென்னையிலிருந்து தலபுராணம் அரங்கேற்ற வந்திருக்கிறார்களென்று கேள்வியுற்ற தேவாலய

தர்மகர்த்தர்களும் மெம்பர்களுமாய தாசீல்தார், மணப்பாறை சப்மாஜிஸ்ட்டிரேட் சுப்பிரமணிஐயர் அவர்களும் அநேக வெளியூர்ப்புலவரும் செட்டிமார்களும் விஜயஞ்செய்திருந்தனர். விளம்பரமும் நகரெலாம் விளங்கின அவையிடத்தே கூட்டம் மிளிறுவதைக்கண்ட ஆசிரியர் திருவாவினன் குடிச்சருக்கத்தையே யெடுத்து வாசிக்கும்படிச் சிறியேற்குத்தரவளிக்க அஃதேபோல் காப்புடன் செய்யுளை வாசிக்கவும் செய்யுள்கடோறு மடங்கியிருக்கும் தத்வார்த்தங்களையெலாம் வடமொழி தென்மொழி பிரமாணங்களால் சொல்நயம், பொருணயம் விளங்க உபந்நியாசித்துமுடிக்க அன்பர்களெலாம் பேரானந்தக்கடலில் மூழ்கி யெம்மவரை வாழ்த்தவும், மேற்கூறிய பிரபுக்களால் மூவர்க்கும் பட்டுப் பரிவட்டம் தலையேயிடப்பட்டு மேளவாத்தியமுழங்க மலையையும் நகரையும் வலம்வரச்செய்து சந்நிதானத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அருச்சனை, முதலாயவைகள் ஆண்டவனுர்க்குச் செய்தாயினபின் விபூதிப்பிரசாதமளித்து பெருமானுற்கு அபிடேகித்த பழம், கன்னல்ரசம், சருக்கரை, தேன்முதலியவைகலந்த பஞ்சாமிர்தமும் விலாப்புடைக்க உண்ணும்படிக் கொடுத்து சட்சுவையுடன் அன்னவிருந்திட்டு, நாலைந்துநாள் கழிய சென்னை யனுப்பச்சுகமே பரிசைக்கொண்டு சேர்ந்தோம்.

## மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவானுயின சிறப்பு.

இலக்கணவிலக்கிய வடமொழி தென்மொழியாஞ் சங்கநூலாராய்ச்சி சித்தாந்த சாத்திரவாராய்ச்சியின் றிறமையைத்தெரிந்த இப்புலவர்களது பெருமையெலாங்கேட்ட பாலவனம் ஜமீன்தாரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனதிபதியுமாகிய ஸ்ரீமந் பாண்டித்துரைத்தேவர் அவர்கள், கதிரைவேற்பிள்ளையவர்களை யழைத்து ஓர் உபந்நியாசஞ் செய்வித்து கேட்டுப் பேரானந்தக்கடலில் மூழ்கியபின் சங்கவித்துவானென்ற பட்டமும், சங்கத்தில் பண்டித பரீட்சைக்குப் பயிலும் மாணவர்தம் F. A. பரீட்சைக்கு இலக்கணத்திற்குப் பரீட்சகராக நியமித்தும் சங்கத்தினிகழ்ந்துவரும் செந்தமிழ்ப் பத்திரிகைக்கு தமிழ்ச்சிறப்பு முதலிய அரியபெரிய விடயங்களை யெழுதிக்கொண்டு வரும்படியாயுஞ்சொல்லி வழிச்செலவுகொடுத்து அனுப்ப சென்னை வந்து சேர்ந்து சுகமேயிருந்தனர்.

## வருணசிந்தாமணியெனு நூலைமறுத்தது.

ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளையும், அதன்வழிவந்தாரையும், ஆறுமுகநாவலரையும் மற்றுமுள்ளோரையும் உள்ளபடி கூறினரேயென்ற துக்கமேலீட்டால் நான்காம் வருணத்தாராகிய சூத்திரரை மூன்றும் வருணத்தாராகிய வைசியரேயென்றபுறட்டுகளைச்செய்து சமயதூடணை சாத்திரதூடணை பெரியோர் தூடணைகள் மலியும்படியாகத் தூஷித்து மீளாநரகிற் காளாகுவான் வெளியிட்ட புத்தகத்திற்குச் சற்றேனுங் கவனியாது எப்புத்தகமாயினும் அவற்றில் தம்பெயரிருந்தாற் சாலுமெனக் கருதும் புலவர்பலர், சாத்துகவி கொடுத்திருப்பதைக்கண்டு சீற்றங்கொண்டு கவிகளிலுள்ள பிழைகளையெல்லாம்

எடுத்தெடுத்துக் கண்டித்து பத்திரிகை வாயிலாகவும் பிரசங்கவாயிலாகவும் ஒழித்ததன்றி, நான்காம்வருணத்தவராய. வேளாளர் வைசியராகார்சூத்திரரேயென்றும் அநேக புராணத்தினுட் பொருள்யாவும் தெற்றிதினுணருமாறும் நிகண்டு மனுஸ்மிருதி, முதலிய நூலளவைகளைக்கொண்டு கண்டித்ததுமன்றி உள்ளூர் வெளியூர்களிலும் தண்டமிழ் நாடாம்மதுரை க்ஷேத்திரத்திலும் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசப்பெருமான் ஆலயகல்யாணமண்டபத்தில் பல்லாயிரஞ் ஜனங்குழுமிய வச்சபையே ஸ்ரீமந் பாண்டித்துறைத்தேவர் அவர்கள் சபாநாயகராக்விருக்க விருதுபட்டியினின்றுபோந்த ஒருவர் வாதிப்பார்போல நடித்துக்காட்ட பிரமாணங்களைக்கொண்டு கண்டிக்கவும் உண்மையின்னதெனக் கருதாது ஜாதிப்பற்றினாலும் வித்வக்காய்ச்சலினாலும் மனம்வெறுப்புற்று நேரினின்று வாதிடவலியின்றி கேவலகாரியத்தால் அதஞ்செய்யக்கருதியிருந்தமையறிந்த ஸ்ரீமந். ஜமீன்தார் அவர்கள் ஸ்ரீமந். பிள்ளையவர்களையழைத்து நடக்குங்காரியத்தைத் தெரிவித்து தாங்கள் இக்கலகத்திற்குடன்படாதுவிட்டு சென்னைசேர்தலே நலமெனச்சாற்றி பரிசளித்தனுப்ப, சுகமேவந்து சேரவும், இவற்றையறியாத சிலர் பலவித வசைமொழியால் வாய்க்குவந்தபடி கூறி விளம்பரமிட்டு மறைந்து திரிந்தனர். இவர்கள் வேளாளராக விருந்தும் வேளாளர் சூத்திரரேயென்றது. சாத்திரத்துணிபே?

## புத்தமதக்கண்டனமும் புத்தகமும் வெளியிட்டசிறப்பு.

இப்பௌத்த மதத்தினர் முந்தியகாலத்துச் சைவமதமென்ன வைணவசமயமென்னஇவைகளெல்லாமோங்காதுஅநேகவித புறட்டுச்செய்கைகளைச் செய்து வீண்கலகஞ் செய்வாராயும் அடிக்கடி யுண்மைச்சமயம் இன்னது பொய்ச்சமையம் இன்னதுவெனத் தெரிந்து கொள்வதற்காக அநேக சைவ பரமாசாரியர்களிடத்து வாதிட்டுத் தோற்றோடியும் பௌத்தம்விட்டு சைவசமயத்தை யநுட்டித்தும் வருவாராயினர். அஞ்ஞான்று, ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளாலும், திருநாவுக்கரசு சுவாமிகளாலும் திருஞானசம்பந்த சுவாமிகளாலும், மற்றுமுள்ள அடியவராலும்பட்டது இவ்வளவெனக்கூறற்பாற்றோ? நன்றுநன்று திருஞானசம்பந்த சரணாலய சுவாமிகளுமன்றோ தம்மிடம்வந்து வழிமறித்த சாரிபுத்தன்தலையை ஞானசம்பந்த சுவாமிகளது பஞ்சாட்சரப் பதிகமாகிய தேவாரத் திருவருட்பாவை யன்புகொண்டோதவும் உடனே வானத்தினின்றோர் இடியானது தடுத்தவன் தலையில்வீழவும் இறந்தான் அது கண்ட மற்றைய பௌத்தர்கள் ஞானசம்பந்தசுவாமிகளிடம் தோல்வியுற்றுப் பல்லோர் சைவராகியும், நாடுவிட்டோடியுஞ் சென்றனர். ஓடிய குழாங்கள் சீனா, ஜப்பான், கொளம்பு, இலங்கை, முதலிய விடங்களிலிருப்பதாகக் கேள்வி இதுபோது அவர்களிற் சிலர் முந்தியிருந்த பௌத்தர்களது சீலத்தையுங் கைநழுவவிட்டு சென்னை முதலிய விடங்களினின் றுலாவிக்கொண்டு பத்திரிகைகளும்; புத்தகங்களும் வெளியாக்கியும். அநேகரைத் தமது மாய சூட்சிக்கு ளகப்படுமாறு செய்தும் வாழுநாளில், சிவதூடணைச் சமயதூடணைச் சாத்திரதூடணைகள் மலிந்திருக்கும் புத்தகத்தைக்கொண்டு ஸ்ரீமந்.

பிள்ளையவர்களிடங்காட்டி அம்மதத்தினரை கண்டித்தொழிக்குமாறு வேண்ட அங்ஙனமே யுடன்பட்டு சீவகசிந்தாமணி நாமகளிலம்பகம், மணிமேகலை, புத்தர்தார்மீகத்திரட்டு முதலிய அநேக நூல்களை யாராய்ச்சிசெய்து புத்தமதக் கண்டனமெனப்பெயர்கோத்து அச்சிடப்பட்டு திருமயிலை கபாலீச்சர் பிரமோற்சவத்தில் பலசனங்குழுமிய திருக்குளத்தருகே அவர்களது போலியாம் பஞ்சசீலங்களைத் தனித்தனியாகவெடுத்துக் கண்டித்துப் புத்தகத்தை யரங்கேற்றினர்.

## திருத்தணிகைப்புராண உபந்நியாசச் சிறப்பு.

இங்ஙனமிருக்க,

ஸ்ரீமாந் பாலசுப்பிரமணிய முதலியார் M. A. ஸ்ரீமாந் சிவஞான முதலியார் B A. முதலியவர்கள் எமதாசிரியரை யணுகி, இதுகாறும் இத்தொண்டை நன்னாட்டில் முறைமே தணிகைப்புராண உபந்நியாசஞ் செய்தவரைக்கேட்டிலோம் சமணசமயிகளது நூலாகிய சீவகசிந்தாமணியைத் தோற்கடிப்பான் சங்கநூற்றிரிபு பொருளையெலாந்தொடுத்து தமது வித்வத்தன்மையைக்காட்டுவான் செய்த ஸ்ரீ. கச்சியப்ப முனிவரரது ஆற்றல் இருந்தவாறென்னே? ஆனதுபற்றி யினித்தாங்கள் வேறு கருமங்களைவிட்டுச் சென்னையில் இப்புராணத்தைவைத்து முடிக்கவேண்டுமெனக் கேட்கவும், அவர்களது அவாப்பெருக்கைத் திருப்தியுறச்செய்வான் பிள்ளையவர்கள் இடம்பொருளேவல் மூன்றையுங்கருதி இப்புராணஞ் சொல்வதற்கிடம் ஸ்ரீ. செட்டிக் கந்தசுவாமிகோயில் வசந்தமண்டபமே யல்லது வேறில்லையெனத் தீர்மானித்து எம்மை அத்தணிகைப்புராணம் வாசிக்கத் திட்டஞ்செய்து தாம் சொல்நயம் பொருணயம்விளங்க அநேக சாத்திரமேற்கோள்களைக் காட்டியுள்ளே பொதிந்திருக்கும் தத்வார்த்தரகசியங்களை யெடுத்தெடுத்துக் காட்டிச் சுமார் 2 வருடகாலமாகக் கஷ்டத்தையும் இலாபத்தையுங் கருதாது உபந்நியாசத்தை நடத்திவந்தார்கள். பின்னர், தெய்வயானைத் திருமணமுதலியவை நடக்குங்காலத்தில் எமக்கும் ஆசிரியர் அவர்களுக்குஞ் சில சன்மானம் அளிக்கப்பட்டன எவரும் அறிந்ததொன்றே?

## திருவிளையாடற்புராணமும், ஸ்காந்தபுராணமும் உபந்நியாசித்தது.

சென்னைச் சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீ. அங்காளம்மன்கோயிலில் பலர் வேண்டுகோட்கியைந்து திருவிளையாடற்புராணம் ஸ்காந்தபுராணம் முதலாயவைகளை முறையே பொருணயம் விளங்க யன்பர்கள் மனமானது சந்தோடசாகரத்திற்றிளைக்கும்படி உபந்நியாசித்துவந்தனர் அம்மையாரது திருக்கலியாண வைபவத்தன்று அரதனம்பதித்த உருத்திராக்கச்சரடு ஆசிரியருக்கும் வாசித்திருந்த யெமக்குபட்டுவேஷ்டியுஞ் சன்மான மளித்தனர்.

## திருவருட்பா விவாத சபை.

இக்கலகம், முதல்முதல் முல்லாவீதியில் நடந்தது. நடந்தமைக்குக்காரணம், வெளியூரினின்றுவந்த ஒருபுலவன் இவ்வளவுந் தேடிக்கொள்கின்றனே

யென்றும் சென்னையிலுள்ள பலர் துணையாக விருக்கின்றார்க ளென்றுங் கருதியே செய்யவந்தனர். இராமலிங்கபிள்ளை பாடலில் இருக்கும் விடயங்களை யறியாதபலர் அபிமானம் வைத்திருக்கின்றார்கள் ஆறுமுகநாவலர், சபாபதிநாவலர், மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் கண்டித்திருப்பவை நெடுநாளாயினமையால் எவர்கொண்டுவந்து மறுபடியும் நிலைநாட்டப் போகின்றார்கள். ஒற்றுமைபிரிந்தால், எக்காரியமும் நிறைவேறாதென்பது கருதியேசெய்யவந்தனர் அஃதாவது, சின்னாளைக்கு முன்னிருந்த யாழ்ப்பாணத்தார் சிலர் புத்தியீனத்தால் இராமலிங்கபிள்ளை அவர்கள்பாடலை யருட்பாவாகா தென்றும் திருமுறையாகா தென்றும் சொல்பவர் எரிவாய் நரகிற்காளாகுவாரென்றுங் கூறியிருக்கின்றார்கள். இதுபோது யாங்களெலாம் இராமலிங்கபிள்ளை அவர்கள் அரியபாடல்களே திருவருட்பாவென்றும், திருமுறையென்றும் சொல்லிப் பிரசங்கிக்கப்போகின்றோம். அதுகாலை யாழ்ப்பாணத்தார் எவராவது அல்லது வேறுபுலவர்கள் எவராவது ஆக்ஷேபிப்பதாக விருந்தால் யாங்கூட்டும் அவைக்கண்வந்து தமது கொள்கையை நிலைநாட்டலாம் அற்றேல் தோல்வித்தானத்திற்குரியவராவார்களென்று விளம்பரமிட. அவற்றைக்கண்ட ஆசிரியர் கவனியாது வேறு தம்முடைய பிரசங்கவிடயத்திற்காலங்கழித்திருந்தனர். சிலர் பெயரைவிளித்து வாதிற்கு வரும்படியாக மறுபடியும் விள்ம்பரமிட்டனர். இவற்றைக்கண்ட நண்பசிகாமணிகள் பலர் ஆசிரியரிடம்வந்து நம்முடைய கொள்கையை நாம்நிலை நாட்டவேண்டுவது ஆவசிகமாகையால் வாளாவிருப்பதில் பயனில்லையென நோட்டீஸ் கண்டவப்பொழுதே வேறுபத்திரிகைவரைந்து சிந்தாதிரிப்பேட்டை உலகப்பமேஸ்திரி வீதியிலுள்ள மிஸ்ட்டர். குமாரசுவாமி முதலியார் அவர்களது கிருகத்தில், தேவாரத்திருவாசகங்களே திருவருட்பா, திருமுறை மற்றையவெலாம் மருட்பாவேயல்லது வேறல்ல அவற்றினுண்மையைத் தெரிந்துகொள்ள விருப்பமுடையார் பலவித்வஜனக் கூட்டமிடையே வந்து அமைதியாக விருந்து கேட்டுத்தங்கள் ஆக்ஷேபணையெலாம் விடுத்து உண்மைதெரிந்துய்வார்களாகவென்று விளம்பரமிட அவற்றைக்கண்ணுற்ற பூர்வபக்கிகள் இம்மாயாவாத தம்ஸகோளரியுடன் வாதிட்டால் தங்கட்கென்னவாகுமோ வென்றகலக்கத்தால் வாராது சிலரைவிட, அவர்கள் மாயாவாதிகளைத் துணைப்பற்றித் திடீரெனவுட்புகுந்து நியாயவரம்பிற்குடன்படாது ஆவேசங்கொண்டாடி மேல்விழ சபைகலையப்பட்டு பெருங்கலகங்களுண்டாக போலீஸ் உத்தியோகஸ்தர்கள் வருகிறதைத் தெரிந்தவரெலாம் ஆணேறுபோனில்லாது மூலைக்கொருவராகக் கம்பிகாட்டினர் உடனே சபைகலையப்பட்டு அடுத்த ஆதிவாரத்தில் வேதாகமோக்த சைவசித்தாந்த சபையே பலவித்வஜனர்சமுகத்தில் சபாநாயகரொருவரை யேற்படுத்தி யாம் வாதிக்கவிருக்கின்றேம். அதுகாலை வாதிக்க பூர்வபக்கிகள் கட்சியில் ஒளித் திருப்பவர் ஒளிந்து திரியாது தங்களுடைய கொள்கைகளைத் தருக்கவிலக்கணத்தோடு சித்த சமாதானமாகக்காட்டி நியாயவரம்பிற்குடன்பட்டு வெற்றியுற்றால் கலமே வாராதுவிட்டால் தோல்வித்தானமும் அவமான

முமே மேலிடுமென்று விளம்பரமிட, அஃதேபோல் தட்டாது வாதிக்கவந்து காத்திருந்தனர். பிள்ளையவர்களுடன் யாமும் இன்னும் அநேக சைவத் திருக்கூட்டத்தினருமாக சபையே போகவும் ஆங்கு நிறைந்திருந்த கூட்டத்தே சபையாரால் தெரிந்தெடுக்கப்பட்ட வித்வசிரோமணி மயிலை; தணிகாசலமுதலியார் அவர்களைச் சபாநாயகராக்கியும், வாதிக்கவந்திருந்த சிலரை விளித்து, எம்முடன் தருக்கலட்சணத்துடன் வாதிப்பார் உளரேல் எழலாமென மௌனஞ்சாதிப்பாராயினர். பின்னர், எமதாசிரியர் தம்கருத்தைமுற்றிலும் எடுத்துக் காட்டிமுடிக்கவும், அச்சபையே விஜயஞ்செய்திருந்த வித்வசிரோமணிகளும் தேவாரத் திருமுறையே திருவருட்பா மற்றையவை அப்பெயருக்கிலக்காகா வென்றும் இராமலிங்க பிள்ளையிருந்த காலத்திலேயே திருவிடை மருதூருலாச்செய்த மகாவித்வான், மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களும், வல்லார் திருவருட்பாவோ டுலகிற்சேர்பசுக்கள்பாவும் திருவருட்பாவெனச்சேலுமே. யென்று கண்டித்து மிருக்கின்றனரே யறியாத சிலர், விடாப்பிடியினால் கதறுகின்றனரே யல்லது உள்ளபடி கிடையாதென்றுமுடிக்கவும். முத்தமிழ் ரத்நாகரம் ஸ்ரீமங் பாநுகவியார் அவர்கள் எழுந்து இவற்றையே தழுவிக்கூறினாராயினும், முக்கியமாக சிலபாடலை நோக்குங்கால் கஷ்டப்பட்டுச் செய்ததாகவே தெரிகின்றது. பரமாசாரியமூர்த்திகளைப்போலருள் பெற்றவரென்று சொல்லுதல் கூடாது. ஆயினும், முழுவருள் பெற்றிருந்தால் இறந்தாரையெல்லாம் எழுப்புதற்பொருட்டுச் செத்தார் எழுவார் மேடையொன்று கட்டிச்செத்த பிணங்களையெல்லாம் புதைத்தும் புதைத்தவிடத்தினின்று தூங்கி யெழுவார்போல் வருவார்களென்று கதறியகாலத்திற்றானே, தாம் அருமையாகக்கட்டிய கட்டடத்திற்றிடீரென இடிவிழுந் தழுந்தச்செய்தது இன்னமிருக்கின்றதே ஐயகோ? இவ்வளவுதீங்கும் சில சீடரால் நேர்ந்தனவேயன்றி வேறில்லையெனத் தீர்மானித்து முடித்தனர் சபைகலையப் பட்டது.

## தொண்டமண்டலக் கலாசாலையிலும் வேணுகோபாலசுவாமி அரங்கமண்டபத்திலுஞ் சபைகூட்டியது.

இம்மட்டினில்லாது தொண்டை மண்டலக் கலாசாலையில் பலவித்வசனர்களைக்கொண்டு கூட்டங்கூடப் போவதாகவும் அதுகாலை சபாநாயகரை நியமித்துக்கொண்டு ஸ்ரீமங் கதிரைவேற்பிள்ளையவர்கள் வந்து தமதுகொள்கையை நிலைநாட்டவேண்டும். அற்றேல் தோல்வித்தானத்திற் கிடமுண்டாகுமென்று விளம்பரமிட அவற்றைக்கண்ட ஆசிரியரும் யாமும் பலபண்டிதருமாகச் சென்றிருந்தோம், அதுகாலை அச்சபையில் விஜயஞ்செய்திருந்த ஸ்ரீமங். டிஸ்டிரிக்ட் முனிசிப் நல்லசாமிப்பிள்ளை B. A. B. L. அவர்களை கட்சியினரிருவரும் ஒருங்கேகூடி சபாநாயகராக விருக்கும்படிவேண்ட ஓர்வாறு சம்மதித்தனர். பின்னர் இருதிறத்தினருடைய கட்சிகளை யெடுத்துக் கூறும்படிப் பார்த்து கதிரைவேற்பிள்ளையவர்களுடைய உண்மையையும் விடாப்பிடியையுங் கண்டு தாங்கள் உள்ளபடிச் சொல்லுகின்றீர்கள் பிறருக்கு மனவெறுப்பே

யல்லது வேறொன்றுமில்லை, காலம் அதிகமாகின்றது. ஆதலால், கட்சியினர் ஒவ்வொருவருக்கும் 10நிமிடத்திற்குமேல் காலவரை கொடுக்கமுடியாது அதற்குள் தத்தம் கொள்கையைக்காட்டி முடியுங்கள் கடைசியாக முடிபுதெரிக்கின்றேனென, ஸ்ரீமந் வேதாச்சலம் பிள்ளையவர்கள் எதிரிகட்சிக்கு முதலாளியாகநின்று வாதிக்கவாரம்பித்தனர். காலங்கடந்தமையால் முடிவாகா முன்னரே நிறுத்திவிடப்பட்டு அக்காலவரையே ஷை பிள்ளையவர்கட்குங் கொடுத்தனர். தாம் கூறவேண்டிய பிரமாணங்களுடன் கூறிக் கடைசியாக உலகமழியினும் உயிர்போகினும் தேவாரத்திருவாசகங்களே திருவருட்பாத்திருமுறையென்று தீர்மானித்து முடித்தனர். பின்னர்சபாநாயகராகவிருந்த ஸ்ரீமந் நல்லசாமிப்பிள்ளை யவர்கள் ஒருவரோடொருவர் பேசிவிட்டுக் காலங்கழிப்பதைப் பார்க்கினும் தத்தம் கொள்கையை புத்தகங்களாக வெளியிடுவாராயின் எவருந்தெள்ளிதினுணரக்கூடும் ஆகையால் ஒருவரோடொருவர்வாதிடாது இம்மட்டில்விட்டு செய்வது நலமென்று கூறிமுடித்தனர். சபைகலையப்பட்டது.

## இராமலிங்கபிள்ளைபாடல் ஆபாசதருப்பணம் அல்லது மருட்பா மறுப்பென்னும் நூல் வெளியாக்கியது.

பின்னர் ஸ்ரீமந். ஆசிரியரிடம் வேதாகமோக்த சைவசித்தாந்த சபையார் வந்து இராமலிங்க பிள்ளை யவர்களது பாடல்களினின்றுமாராய்ந்து அதில் மலிந்திருக்கும். பொய், சிவதூடணை சாத்திரதூடணை முதலியவைகளையெடுத்து ஓர் நூலாக வெளியிடுவது தான் யுக்தமென அவ்வாறே செய்வதாகச் சம்மதித்து எம்மையழைத்துப் புத்தகங்களை யாராய்ச்சி செய்யும்படிச்சொல்லியதிலுள்ளனவற்றை வேறு எழுதும்படி யாஞ்ஞாபிக்க அஃதேபோல் யானெழுதிவரவும், ஆசிரியர் அவர்கள் செய்யவேண்டிய துணையைச் செய்து சுமார் 12 பாரமடங்கிய புத்தகமாக முடித்து இராமலிங்க பிள்ளைபாடல் ஆபாசதருப்பணம் அல்லது மருட்பா மறுப்பென்னும் பெயரைக் கொடுத்து முடித்து திருமயிலை மாடவீதியிலுள்ள சிவப்பிரகாச நிலயமெனுங்கிருகத்தில் பலவித்வஜனர்முன் அரங்கேற்றி வெளியாக்கப்பட்டது.

## காஞ்சீபுரத்திலுண்டாய கலகமொழித்தது.

இம்மட்டினில்லாது.

வெளியூராரும், பிள்ளையவர்கள் கொள்கையையே தழுவி நடப்பதன்றி இராமலிங்கபிள்ளையவர்களுடைய பற்றுதலும் ஒழிந்துபோகின்றதே யென்ற பெரும் விசனத்தால், இக்காஞ்சியிலுள்ள சிலரைத் துணைக்கொண்டு உண்மைச் சிவநேயமுடையாரையும், பிள்ளையவர்களையுந் திருவருட்பாவையுந் தூடணைச்செய்து மீளாநரகத்திற்காளாகுவான்கண்ட ஸ்ரீமந். வித்வான் உரையாகிரியர் கா. ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள் ஸ்ரீமந். கோவிந்தராஜ முதலியார் ஸ்ரீமந் பி. செ. முருகேசமுதலியார் அவர்களும் ஜமீன்தார் ஸ்ரீமந்.

சுப்பராயமுதலியார் அவர்களுங்கூடியோசித்து பிள்ளையவர்களைக் காஞ்சிக்கு வரவழைத்து கண்டிக்கும்படியாகத் தெரிவித்து சிலதுண்டுப் பத்திரிகை வெளியாக்கினர் இவற்றைக்கண்ட பூர்வபக்ஷிகள் தாங்கள் எதிரிட்டு விடையிறுக்க பேராற்றலிலாது சிலமாயாவாதிகளைத் துணையாகக்கொண்டுவொதிப்பார் போல் ஆடிசன்பேட்டைச் சத்திரத்தில்வரவும், பிள்ளையவர்கள்செய்யும் பிரசங்கசோணமாரியைக் கண்டஞ்சியோடியும் வீண்கலகஞ்செய்து நிந்தைமொழி கூறியுந்திரிந்தனர் பொறாமையாற் கூறுபவர், எரிவாய் நரகிற்காளாகுவாரென்பது திண்ணமெனப் பொருட்படுத்தாது விட்டார்கள்.

## மருட்பாமறுப்பின் போலீஸ் வழக்கு.

இராமலிங்க பிள்ளை பாடலிலுள்ள சில ஆபாசங்களைத் திரட்டி ஆபாசதருப்பணமெனவோர் நூல்விடுக்க ஒருவர் செய்த கலகத்தால் சிலர்சேர்ந்து ம. ா. ா ஸ்ரீ. வடிவேற்பிள்ளையை வாதியாக்கி பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டில் (Black Town) வியாச்சியந்தொடுத்து, எம்மவரிருவர்மீதும் கேஸ்கொண்டுவரப்பட்டது அதுபோது ஸீனியர் மாஜிஸ்ட்டிரேட்டாகவிருந்த ஸ்ரீமத். ஆஜாரிமன்கான் பகதூர்கான்சாயேப் அவர்கள் முன்னிலையில் உலகமெங்கும்புகழுறும் சுவாமிகளைக் கேவலமாக புத்தகத்தில் தூஷித்து அநேக பேர்களுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் கெடுதியைத்தேடிவிட்டபடியால் அவமானமாக விருக்கின்றதென்று பிரயாதுசெய்தனர்.

## பிரதிவாதிகள் கக்ஷியாவது.

பெரியோர்களாகிய ஆசாரிய சுவாமிகளது பெருமையெலாங் குறைவுபடும்படி வாய்க்குவந்தபடி தூஷித்து நடித்து உலகைக்கெடுத்ததுமன்றித்தாமே கடவுளென்றும் வேதசிவாகமமெல்லாம் சந்தைப்படிப்பென்றும் தம்பெரும்புகழையே பாடிக்கொண்டும் தமதுபாடலே யருட்பாத் திருமுறையென்றும் மற்றையவேதமெலாம் நாணமுற்று அப்பாற் போயிற்றென்றும் கூறினராதலால் உலகர்க்கு நன்மையைச்செய்யவும் பின்வருபவர் கண்டறிந்துய்யும்வழியைக் காட்டினேமேயல்லது வேண்டுமென்று செய்தேமல்லேம் என்றேம்.

இவற்றைத்தெரிந்த மாஜிஸ்ட்டிரேட் அவர்கள் எமது பக்கம் வாதிக்க வந்திருந்த பிரம ஸ்ரீமத் விசுவநாதசாத்திரியார் அவர்களையும் சாமராவ் அவர்களையும் விளித்து தீரயோசிக்க வேண்டியிருப்பதினால் வாதிபக்கத்து சாட்சிகள் வரவேண்டும். அவர்களுக்கு படித்திறம் முதலியவைகள் கட்டவேண்டுமென அங்ஙனமே யொப்பவும் சில சாக்ஷிகளைக் கொண்டுவந்தனர். முக்கியமாக வந்திருந்த வித்வான் பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதர் சாமிநாதய்யர் அவர்களும் இராமலிங்க பிள்ளையவர்கள் பாடல் அருட்பாவென்று சொல்லுதல் கூடாது பாட்டுகளில் நஞ்சும் பாலுங் கலந்திருப்பனவைபோலிருக்கிறதென்று தெய்வத்திற்கஞ்சிசொல்லவும் மாஜிஸ்ட்டிரேட் அவர்

கள் கேஸைத் தள்ளவிருந்தும் எதிரிகள் வக்கீல்கள் விடாப்பிடியினால். எங்கள் பக்கத்து சாக்ஷிகளை விசாரிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டனர், எங்கள் சாக்ஷிகள் சென்னை காஞ்சிபுரம், சிதம்பரம், சீர்காழி, திருப்பாதிரிப் புலியூர், கூடலூர், வடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, மதுரை, திருப் பரங்குன்றம், திரிசிரபுரம், முதலிய அநேகவிடங்களிலிருந்து பெரிய மடாதி பதிகளும் வித்வான்களும், ஆசாரியமூர்த்திகளுமாக விளங்கினர். இவர்களைக் கண்ட மாஜிஸ்ட்டிரேட் அவர்கள் மூத்தவயதின் நன்மையையும் வைதீக கோலத்தையும் கல்வித்திறமையையுங் கண்டும். 6 மாதகாலமாக விசாரித்து வந்தனர் எம்மவர்பால் சாக்ஷியாகவந்தவர் சுமார் 30 பெயருக்கு மேலாகவே யிருந்தனர் கடைசியாக 27 கேள்விக்குஞ் சமாதானமாகப் பத்திரிகைகளும் புத்தகமும்,கையெழுத்துப்பிரதிகளுங்காட்டி வேங்கலக்கோட்டையில்யானை கெர்ச்சித்தாற்போற் செப்பிய சாக்ஷித்திறமையைக்கண்ட நீதிபதி அவர்கள் 1904 ௵ நவம்பர், கார்த்திகை௴ சோமவாரம்எம்மவர்க்கு வெற்றியுறும் படித் தீர்ப்பளித்தனர்.

## கேஸ்வெற்றியைக்குறித்து போற்றிய சிறப்பு.

சென்னை, மயிலை, காஞ்சி, சிதம்பரம், சீர்காழி, திருவண்ணாமலை, தேவ கோட்டை,திருச்செந்தூர், திருப்பரங்குன்றம்,மதுரை, உறையூர்,திரிசிரபுரம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் முதலிய தேவஸ்தானங்களில் திருவருட்பா வெற்றியைக்குறித்து சுவாமிக்கு அபிடேகவலங்கார தீபாராதனையும், கற் கண்டு சர்க்கரை, பழம் முதலியவை விநியோகித்தும் கோபுரந்தூபி, மதில் முதலிய தின்மீது தீபங்கள்வைத்தும் இவ்வாறுயவைபக் காட்சியைக் கொண் டாடினார்கள்.

## சென்னை ஐகோர்ட்டிலும் வெற்றியுற்றச் சிறப்பு.

இவ்வாறுகியுங் கவனியாத சிலர் மிஸ்டர் பாரிஸ்டர் ஜான் ஆடம்தரை யைக்கொண்டு ஐகோர்ட்டு நீதித்தலத்தில் கிரிமனல் ரிவிஷன் பெட்டிஷன் கொடுக்க நீதித்தலத்தார் விசாரிக்க வெண்ணங்கொண்டு எங்கட்கும் நோட் டீஸ் அனுப்பியிருந்தனர். அவற்றைப்பெற்று கேஸிற்கு ஆஜரானோம் (தமி ழ்ப்பாடல்களை இங்கிலீஷில் மொழிபெயர்த்தும் அச்சிறக்கவும் சுமார் 400, ரூபாய்க்கு மேலாயின. எதிரிகள் பக்கம் வாதிக்க கனம்பொருந்திய பாரி ஸ்ட்டர் சங்கரநாயர் அவர்கள் வந்தனர். எங்கள் பக்கம் முந்தியிருந்த வக்கீல் பிரமஸ்ரீமத் விசுவநாத சாத்திரியாரும், பிரமஸ்ரீமத் Honarable வி. கிரு ஷ்ணசாமி ஐயர் B. A. B. L. அவர்களும் ஆஜராகினர். அதுகாலை Honarable justice, Mr. Benson Honarable justice Mr Moore ஜட் ஜுகள்முன்பு கேஸ் கொண்டுவரப்பட்டு விசாரிக்கவும் உண்மையைத் தெரி ந்த நீதித்தலத்தினர் கீழ்க்கோர்ட்டு தீர்ப்பே சரியென்று கடந்த போலீஸ் கோர்ட் தீர்ப்பாய ௴ வாரம், தேதியன்றே இக்கேஸையும் தள்ளி வெற்றி

யைத்தந்தனர் தெரிந்த அன்பர்கள் கேஸ்முடிந்த குறிப்பினாலேயே தெய்வத்திருவருள் நன்குதெரியும்.

## கேஸ்வெற்றியைக்குறித்து கொண்டாடிய சிறப்பு.

சென்னை ஸ்ரீ. கந்தசாமிகோயிலில் ஸ்ரீ பரமாசாரிய சுவாமிகளுக்கும் கந்தக்கடவுட்கும் அபிடேகவலங்கார வாராதனையியற்றிப் பன்னிரு திருமுறைகளையும் விமானத்தில் ஆரோகணித்து மிக்க விமரிசையாக வீதியுலாப் பவனியுற்சவங்கொண்டாடி மரியாதை செய்யப்பெற்று மகிழ்ந்ததுமன்றி சிந்தாதிரிப்பேட்டையிலும் ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி கோயிலில் பன்னிரு திருமுறைகளையும் அழகிய விமானத்திலிறுத்தி மேளவாத்தியம் முழங்கவும். அநேக சபையினர்கள் தேவாரத் திருவருட்பாப் பாராயணஞ் செய்ய வீதியுற்சவஞ்செய்து மகிழ்வுற்றனர்.

## தேவகோட்டையிற் கொண்டாடியது.

வித்வசிரோமணி ஸ்ரீமத் சுவாமிநாதபண்டிதர் அவர்கள் கேஸ்வென்றியைக்குறித்து அநேக தேவாலயங்கட்கு அபிடேகவாராதனை செய்தது மன்றி ஸ்ரீமாந் பிள்ளையவர்களை வரவழைத்து. ஜமீன்தார், அ. ரு. அ. ரு. சோ. ம. சோமசுந்தரஞ் செட்டியார் முதலிய செட்டிப் பிரபுக்களுக்குச்சொல்லி கேஸ் வெற்றியைக் குறித்து பன்னிருதிருமுறை யுற்சவம், ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் ஆலயத்தின் யானைமீது ஆரோகணித்துக் கொண்டாடி ஸ்ரீமாந் பிள்ளையவர்களால் உபந்நியாசகஞ் செய்வித்துச் செவியாரக்கேட்டு சந்தோடக் கடலில் மூழ்கி, பட்டுபீதாம்பரஞ் சன்மானமளிக்கப் பெற்றனர்.

## சிதம்பரத்தில் யானைமீது திருவருட்பாத் திருமுறை யுற்சவம், நடத்திஆயிரக்கால்மண்டபத்தி லுபந்நியாசித்தது.

சிதம்பரம் ஸ்ரீ நடராஜப்பெருமானை யன்றி வேறொன்றையுங் கருதாத தில்லைவாழந்தணர்களிற் சிலர், எதிரிகள் கட்சியிற்சேர்ந்து கல்விகேள்விகளில் நிரம்பிய தீக்ஷதர் அநேகர்கள் இக்கேஸ் வெற்றியைப்பற்றி உற்சவம் கொண்டாடி பிள்ளையவர்களை ஆயிரக்கால் மண்டபத்தி லுபந்நியாசிக்கச்செய்து மரியாதையிட் டனுப்பவேண்டுமென்று கருதி ஷை கதிரைவேற்பிள்ளையவர்களை யழைக்க அவற்றைக்கண்ட சிலர் பொறாமையுற்று கூடாதென்று மறுத்தும் பயன்படாது போயின. ஸ்ரீமாந் சுவாமிநாத பண்டிதர் அவர்களும் இன்னும் அநேக தீக்ஷதர்களும் ஒருங்கேகூடிமுயற்சியுற்று எவ்வாயினும் இற்றைத் தினம் அரசுவாமீது திருமுறைகளை யமர்த்தி உற்சவங்கொண்டாடாது விடேமென்று சாதமிட்டு, அவ்வாறே ஸ்ரீ நடராஜப்பெருமானை முன்னிட்டு பல பட்டவர்த்தனர்களும் ஆன்றோர்களும் முயற்சியுற்று மிக்கவி மரிசையாக உற்சவங்கொண்டாடினபின்னர் ஆயிரக்கான் மண்டபத்தில் அநேக ஜனங்கள் குழுமிய சபையிடத்தே தேவாரத்திருவருட்பாச் சிறப்பையெடுத்து உபந்நியாசித்துமுடிக்க அவையிடத்தேபட்டுபீதாம்பரசன்மானஞ்செய்யப்பெற்றனர்.

## காஞ்சிபுரத்தில் செய்த திருமுறையுற்சவ வைபவம்.

ஸ்ரீஏகாம்பரேசுரர் ஆலயத்தில் சுவாமிக்கும் அம்மைக்கும் நால்வருக்கும் அபிடேகவலங்காரஞ்செய்து, திருமுறைகளை யானைமீதேற்றி மிக்க கேளிக்கையாக வீதியுலாக்கோலம் நடந்துவருங்கால் இவற்றைக் கண்ணுற்கண்டு சகியாத சிலர், அக்கினி பாஷாணத்தால் ஒவ்வொருவரையும் நாசஞ்செய்வான் கருத ஸ்ரீ ஏகாம்பரேசுர் பெருமானது திருவருளால் முடியாதுபோகவும் அதிகாலை ஆணேறுபோல் உலாவிக்கொண்டிருந்த ஜமீன்தார் கா. மு. சுப்பராயமுதலிய அவர்கள் ஷை யாரை யச்சமுறச்செய்து யுற்சவம் செய்து கண்டு களித்தபின்னர் உருத்திராக்க கண்டிகை பரிசளிக்கப் பெற்றனர்.

## திரிசிரபுரம், உறையூர் ஸ்ரீ பஞ்சவர்ணேசுர சுவாமி கோயிலில் உற்சவங் கோண்டாடியது.

இவற்றைக் கண்ட உறையூர் சைவ சித்தாந்த சபையினர் திருவருட்பா விளக்கமெனை ஓர் நூலை வெளிப்படுத்தி யதுகாலை ஆசிரியரையும் எம்மையும் அழைத்துச் சென்று திருவருட்பாப் பெருமையை உபந்நியாசிக்கச் செய்து உபந்நியாசகம் முடிந்தபின் இரவில் மிக்க விமரிசையாக புட்பச்சிவிகையில் திருமுறைகளையமர்த்தி பாணவேடிக்கை முதலியவை செய்து உற்சவங் கொண்டாடினுர்கள்.

## புரசை ஸ்ரீ கங்காதேசுரப் பெருமான் கோயிலில் கோண்டாடிய சிறப்பு.

புரசைப் பரசிவ தமிழ் வேத பாராயண சபையார் தலைவராகிய கதிரைவேற்பிள்ளை யவர்களது அனுமதியினுல், ஸ்ரீ மணி வாசகப்பெருமானுக்கு புஷ்ப பல்லாக்கு உற்சவஞ் செய்வித்து திருவெம்பாவைத் திருவருட்பா வெளியாக்கி திருமுறை உற்சவமுங் கொண்டாடி பிள்ளையவர்கட்கு மரியாதை செய்யப்பெற்றனர்.

## சிந்தாதிரிப்பேட்டை சபையினரும் மற்றவரும் பரிசளித்தது.

கேஸ் வென்றிக்கு மிக்க சிரத்தையாகப் பாடுபட்ட ஸ்ரீமத் வக்கீல்விஸ்வநாத சாத்திரியாருக்கு மரியாதை செய்வான் கருதி, அநேக நண்பர்களது பொருளுதவியால் ஸ்ரீ சிந்தாதிரிப்பேட்டை ஆதிபுரீசருக்கு அபிடேகவலங்காரவாராதனைச்செய்து, வக்கீல் அவர்களுக்கு பொன் கடியாரமும் கொலுசும் பிள்ளையவர்கட்கோர் பொன் மோதிரமும் பரிசளிக்கப் பெற்றனர்.

இவ்வாறே சீர்காழி, முதலிய அநேக க்ஷேத்திரங்களில் நிகழப் பெற்றது மன்றிப் பரிசும் பெற்றனர்.

## சுப்பிரமணிய பராக்கிரமம் வெளியிட்ட சிறப்பு.

அநாதிமலமுத்தபதியாகிய ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானது திவ்விய திருவிளையாடல்களனைத்தையும், திருச்செந்தூர்ப்புராணம் கதிர்காமத்தலபுரா

ணம்' திருப்பரங்கிரிப் புராணம், பழநித்தல புராணம், திருத்தணிகைப் புரா ணம், ஸ்கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், திருப்போரூர் புராணம், முதலிய அநேக அரிய பெரிய புராணங்களிலிருந்தும், சுருதிஸ்மிருதி முதலிய நூல்களிலுள்ள ஆதாரங்களைக்கொண்டு மந்திரபாவனை முதலியவைகளையுந் தெளிவாக பல திருமுகூர்த்தப் படங்களையுஞ் சேர்த்தியற்றி வித்தியாரத்நாக ரம் பிரஸ் தலைவர் பி, நா, சிதம்பர முதலியார் அவர்களால் வெளியிடவைத்த னர். நடந்தவை 1906ஸு

## கருவூர் தலத்திற்கு உத்தியோகமாய்ச்சென்று தலபுராணவசனமியற்றியது.

இவ்வாறிருக்குங் காலத்தே கருவூருக்கு ஓர் தமிழ்ப்பண்டிதர் வேண்டு மென Revd- கிளேடன் துரையவர்கள் கேட்டுக்கொண்டமையால் இங்கு ள்ள நண்பர் ஒருவரால். சிபார்சு செய்யப்பட்டு அங்கு போய் வாழ்ந்துகொ ண்டு ஸ்ரீ பசுபதீச்சுரப் பெருமான் சந்நதியடைந்து தெரிசித்தும் சிலேடை சிங்கமென்பார் ஒருவர் இவர்களது போரற்றலையுணராது தன்னுற்றலைக்காட் டுவான் சென்றகாலை ஆற்றலொடுங்கும்படி கேள்வியைக் கேட்டு பதில் கூறாது விழிக்கச் செய்து ஸ்ரீ பசுபதீச் சுரவாலய திருப்பணிகள் செய்யும் செட்டிமார்களது துணையைக்கொண்டு கும்பாபிடேக நாளைக் கவனித்து தலபுராணம் வடமொழியிலிருப்பதை யாராய்ந்து தெரிந்துகொள்வதற்குதமி ழில் மொழிபெயர்த்து பசுபதீச்சுரப் பெருமானது கும்பாபிடேகத்தன்று பல்லாயிரஞ்சனங் குழுமிய சபையே அரங்கேற்றி வெளியாக்கினர்.

## பிள்ளையவர்களது சற்புத்திரர் திருவவதாரமும் கற்பரசியார் சிவசாயுச்சியமுற்றதுவும்.

இங்ஙனமாக வாழுங்காலத்தே தமதருமைப் பத்தினியாராகிய வடிவாம் பிகையம்மையார் மூன்றாவது திருநாவுக் கரசெனும் ஓர் ஆண்மகவைப் பெற்று நான்காநாள் ஸ்ரீ உலகமாதாவாகிய பரமேஸ்வரியின் திருவடிப்பே றெய்தினர்.

## பிள்ளையவர்கள் யாழ்ப்பாணஞ்சென்று கந்தசுவாமியருளுற்றது.

இவ்வாறாக மனைவியைப் பறிகொடுத்து மக்களைப் பாதுகாத்துக் கொண் டிருக்கும் பிள்ளையவர்களைத் தமது பந்தும் சுற்றத்தாரும் மித்திரரும் ஒருங் கே கூடி யோசித்துத் தங்கட்கும் பிள்ளைகளுக்கும் உரிமையாக நின்று செய் யவேண்டிய பணிகளைச் செய்பவர் ஒருவருமிலையாதலால் யாங்கள் சொலுஞ் சொல்லைத்தட்டாது, புனர்விவாகத்திற்கு ஆயத்தஞ் செய்யவேண்டுமெனமன ஞ்சம்மதிக்க மாட்டேனென்றனர்.

பின்னர் இரவும் பகலும் இடைவிடாது ஒருவேளையுண்டியேற்று ஸ்ரீ கந்தசுவாமியார் ஆலயத்திலேயே உபவாசமிருக்க ஸ்ரீ கந்தசுவாமியார் முன்

தோன்றி யஞ்சர்க புநர்விவாகம் வேண்டாம். அவதானம் செய்யப் பிரயத்தினப்படுக யாம் நிற்கின்றோமென்றருளி யந்தர்த்தானமாயினர். பெருமானது அநுபூதியுற்றபின் அடுத்தவாரமே விளம்பரமிட்டு சோடசாவதானஞ் செய்யப்போர்தனர்.

## சதாவதானஞ் செய்த சிறப்பு

பெருமானது அநுபூதியுற்ற பிள்ளையவர்கள் அநேகரறியும்படியாக விளம்பரமிட்டு, யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி ஸ்ரீ புதச்சந்நதி கந்தசுவாமி கோயிலின்கண் நன்னூற்காண்டிகை விருத்தியுரை யாசிரியராகிய வித்வான் வ. குமாரசாமிப் புலவர் அவர்கள் சபைத்தலைவராக வதியவும், அநேக செந்தமிழ்ப் பண்டித சிகாமணிகளும், சமஸ்கிருத பண்டிதர்களும் விஜயஞ் செய்யவும் ஆசிரியர் அவர்கள் தமது உபாசனாமூர்த்தியின் அநுபூதி தோத்திரத்தைத் துதித்து பதினெட்டாவதானங்களைச் செய்துமுடிக்க விஜயஞ்செய்த பண்டிதர் பலர், அவதானியர்மீது வியப்புற்று பல பாமாலைகள்சூட்டி மகிழ்ச்சி கொண்டாடினர். பின்னர் மக்களை மாதுலர்பால் ஒப்புவித்து தந்தையர்க்கும் மற்றையோர்க்கும் தம் கோள்கள் மாறியிருப்பதால் விவாகவிடயம் வேண்டாமென்று சொல்லிச் சென்னை சேர்ந்து புரசையடைந்து ஸ்ரீ கங்காதரேசுரப் பெருமானது ஆலயத்தின் ஸ்ரீமத் நாகசாமி குருக்கள் அவர்களில்லத்தே போஜன முதலியவைகளைப் பெற்று 8 நாளிருந்து சதாவதான விளம்பரம் முதலியவைகளை வெளியிட்டு சென்னை லட்சுமி விலாச நாடக சாலையில் பல வித்வான்கள் குழுமிய சபையிடத்தே பாலசரஸ்வதி ஸ்ரீமாந் ஞானானந்த சுவாமிகளை சபைத்தலைவராக்கினர். வேலுமயிலுந் துணையென நவிலல் இலாட சங்கிலி கழற்றல், சிலேடைக் கட்டளை கலித்துறை, சிலேடை வெண்பா நிரோட்டகம் முதலியன. 6 இலக்கணவிடை உபந்நியாசம் இரண்டறக்கலத்தல் உபந்நியாசம், பாரதச் செய்யுளுரை, இங்கிலீஷ் கண்டப் பத்திரிகை, வருடந், தேதி, பிறந்த நாள், இலக்கினம் பிரதம நட்சத்திரம் முதலியவைகளும், எண் கணக்கில் கூட்டல் 1, கழித்தல் 1, பெருக்கல் முதலியவைகளும் அன்பர்களது மனமானது குதூகலமுறுமாறு காட்டி முடித்து சதாவதானி யென்ற பட்டங்கொடுக்கப் பெற்று சுகமேயிருக்கக்கண்ட பெருமைகளை கரூர் துரையவர்கள், நீலகிரி குன்னூர் உத்தியோகத்திற்கு அனுப்ப உத்தேசித்ததையறிந்த ஆசிரியர் அவர்கள் எம்மிடமும் மற்றைய சில நண்பர்களிடமும் குளிர் தேயத்தைப்பற்றி யாசங்கைகாட்டி காலகிரகங்களும் மாறுபட்டிருக்கின்றன உத்தியோகம் வேண்டாமென்று சொல்லிக் காலங்கழிப்பது யுக்தமெனத் தோன்றவில்லையாயினும் ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுடைய மலைநாடானபடியால் போவதே சரியென்று சொல்லிக் குன்னூரடைந்தனர்.

Revd. Clayton துரையவர்களிடம் உத்தியோகம் பெற்று நட்பு காட்டிப் பின் தெய்வீக நிலையுற்றது.

கல்வி சாதுரியத்தையும் நன்னடக்கையுமறிந்த துரை அவர்கள் இக்கதிரைவேற்பிள்ளையவர்களை யழைத்து தம்மிடம் தமிழ்ப் பண்டிதராக்கிக்கொண்டனர். பின்னர் அக்கூனூரில் தமிழ்ப் பண்டிதராகவிருந்த ஸ்ரீமந் சொக்கலிங்கம் பிள்ளையவர்களும் மற்றைய நண்பர்களுமாக ஸ்ரீமந் பிள்ளையவர்களிடம் நெருங்கி நட்புபாராட்டி வருவாராயினர். இளையான்குடி மாற நாயனார் புராணம் முதலியவைகளைச் சொல்நயம் பொருணயந்தேங்க பல்லோர் மனமுஞ் சந்தோஷிக்குமாறு பிரசங்கித்து ஒருமாத காலங்கழிய கடந்த பராபவ௵ பங்குனி மீ 13௳ செவ்வாய்க்கிழமை மக நட்சத்திரத்தில் சிவகுகப் பெருமான் றிருவடிப் பேருமத்துவித முத்தியை யடைந்தனர். சுபம்.

## முற்றிற்று.

### வாழ்த்து கலி விருத்தம்.

வாழி கதிரைவேற் பிள்ளை வழங்கிய
வாழி புராணமெய்ந்நூலுரை வையகம்
வாழி நீறுநற் கண்டிகை மாதவர்
வாழி யன்பரெஞ் சைவமும் வாழியே.

Revd. கிளேட்டன் துரையவர்களால் மெயில் பத்திரிகையில் வெளிப்படுத்தியவை:

தமிழ்ப் பாண்டித்தியத்தின் அபிவிருத்தியி லூக்கமுடைய சதாவதானம் நா. கதிரைவேற் பிள்ளைக்கு இம்மாதம் 25-ந் தேதி குன்னூரில் திடீரென்று நேர்ந்த மரணம் மிக்க துக்கத்தையுண்டாக்கத்தக்கதே. அவரின் வயது 33 ஆயினும் இச்சென்னையிலும், மதுரையிலும், தன் சுயநாடாகிய இலங்கைக்கு வடக்கிலும் தமிழ் கல்வியிற் சிறந்தவரென்ற கீர்த்தியைப் பெற்றிருக்கின்றார். பூர்வீக பாஷையின் தத்துவ சாஸ்திரங்களில் பாண்டித்யமும் மிக்க வைராக்யமுமுடையவரென்றும் பிரசித்தியடைந்தவர். சின்னாளைக்குமுன் இச்சென்னையில் சதாவதானம், அதாவது (100 விஷயங்களை ஏக காலத்தில் கவனமாய்ச் செய்தல்) ஆச்சரியமான பெரு ஞாபகத்தைக் காட்டினார். அக்காலத்திலாங்கு வந்திருந்த வித்வான்கள் முன்னிலையில் அபரிமிதமான வரிசைகளையுடைய எண்களின் தொகைகளையும் மிக்க கஷ்டமான பல தமிழ்ச் செய்யுட்களைச் சொல்லியும் அநேகர் பிரமிக்கும்படியான கேள்விகட்குச் சிறிதேனும் தாமதமுஞ் சந்தேகமில்லாதும் கலவரப்படாமலும் விடையிறுத்தியபின்னர் தான் சதாவதானியென்ற பெயரால் வித்வசிரோமணிகளால் அழைக்கப்பட்டார். அவர் அநேக நூல்களைச் செய்திருப்பவராயிருந்தும் அவற்றுள் மிக்க அருமையும் எவருந் தெரிந்துகொள்ளும்படியாய் வெளியாக்கியது தமிழ்ப் பேரகராதியே.

தம் வேலைகளில் மிக்க ஊக்கமும் ஜாக்கிரதையுமுடையவர். அவர் வைதீக சைவராயிருந்தும் அந்நாட்குரிய வேலைகளின்பேரில் மிக்க கவனமுடையவர். அவர் பிறப்பு மிகச் சிறந்ததே.

சிவமயம்.

இஃது

சென்னபட்டணம், சுந்தராபார்த், மாபூப்காலேஜ் பண்டிதராகிய

அருணாசலம் பிள்ளை யென வழங்கும்

திருவேண்பாக்கம் சிவபாத நேசம் பிள்ளை அவர்களியற்றியன.

பொலம்பூத்த மலர்க் கொன்றைப் பூந்தொடைய
லணிந்தபிரான் பொலிந்து தோன்று
கலம்பூத்த திருக்கோணங் கேதீசத்
தலமிரண்டு நண்ணு நாட்டின்
நிலம்பூத்த யாழ்ப்பாணத் தொருபுலோ
லிப்பதியு ணெடுநீர்க் கங்கைக்
குலம்பூத்த நாகப்ப வேள்தவத்துக்
குமாரனு யுதித்த சீலன். (௧)

சொல்லாருஞ் செந்தமிழி னிலக்கியமு
மிலக்கணமுந் தொன்னூல் யாவும்
வல்லார்பாற் கற்றுணர்ந்தோன் வயங்குறுமுப்
பொருடேர்ந்த வண்மை யாளன்
பல்லாரும் புகழவைக்க ணவதான
மொருநூறும் பண்பிற் செய்தோன்
அல்லாருங் களப்பெருமான் குகப்பெருமா
னடியிணைக்கே யன்பு பூண்டோன் (௨)

மன்னியமா யாவாத தும்சகோ
ளரியென்ன மதித்துச் சான்றோர்
பன்னியநற் கதிரைவேற் பாவல்லோன்
பராபவவாண் டதனைப் பற்றித்
துன்னியபங் குனிமாதம் பூர்வபக்கத்
துவாதசியின் மகநாள் கூட
உன்னியவிச் சுபதினத்தில் சிவகுகன்றன்
திருவடிப்பே றுற்றான் மன்னோ. (௩)

வெண்பா.

என்னேயுலகத் திறந்தா னெனப் புகல்கை
துன்னார் துதிகதிர்வேற் றோன்றலே நீர்—இன்னினியே
நத்தம்போ லென்ன நவின்ற திருக்குறட்கே
யொத்துநின்ற வுத்தமனை யூங்கு. (௪)

நாட்டு புகழ்க்கதிர்வே லுவலனைத் சான்பிரிந்த
கூட்டாத்தா ராற்றுமைக் கென்குறிக்கேன்—வாட்டத்தார்
பொய்பா மொழியார் புகலுவப்புக் கூடியென்ற
மெய்யாம் பொருளிதுவே மேல். (ரு)

இஃது.

திருச்செங்கோடு விவேக திவாகரன் பத்திராதிபர்
ஸ்ரீமான் தி. அ. முத்துசாமிக் கோனாரவர்களியற்றிய.
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வான் றமிழா ருலகுளஈநன் மறையவரு மிறையவரும் வடசொல் மேற்சொ
லான்றவறி வினருமம ரரியுபெரு மவைக் களத்தோ வரிபோன் மற்றை
மூன்றகமு மசமுகக முதிருமதி மதுரநய மொழியாலன் பிங்
கீன்றவரும் வாழ்த்தவரு கதிரைவேற் காளாய்நின் னியல்பு நன்றே.

எம்மதத்து முண்மையுண்டென் றுரையிருப்பப் பிறமதமே விசலியீண்டு
வம்பினெனக் கூவிமத வாதிடுவோ யெனவெள்ளி மகிழ்வார் சில்லோர்
நம்மிறைமுக் கட்பெருமா னிந்தைசகி யார் பெரியோர் சன்மா ணிக்கர்
செம்மையுறு சம்பந்தர் சங்கரர் ராமாநுசர் தம் செயல் காணுரே

அஞ்சிறைவண்டிசை பாடச் சேற்றிதழ்த்தா மரைப்பீடத்தன்னப் பார்ப்
கொஞ்சி மணவினையியற்று வளவயற்பு லோலிதவப் புனிதத் துற்றப் [புக்
பிஞ்சு மதி நதிமுடிபாற்பெம்மானோர் மாடநிரை பிறங்கு சென்னை
வஞ்சி, கஞ்சி கூடன்முதற் பலகளத்துஞ் சைவமழை வருஷித்தாயால்

புண்டரமேன் மந்தியணிந் தைந்தவித்தார் போன்றுறப் பண் பூவைபாட
அண்டு குட்டி சதியுற நின் ருட்டயருஞ் செங்கோட்டின மலற்போற்றி
வண்டமிழா லவதான மியற்று முறை யிருதினத்தென் வயத்தி லாய்ந்து
கொண்ட சாக்கிர மதியோய் நினைமறத்தற் கெவ்வாறு கூடுமந்தோ
[டாலம்
உனைவிடுத்திங் கறமியற்றேனென மரைத்தன் றுரைத்தமொழியொன்றுண்
மனைவிடுத்திங் கியற்று செயலிலை யெனவோ ஆறுமுக வள்ளன் மெய்ந்நூல்
புனைதிடத்த சோமசுந் தர முகிலு மமரவையின் புலமாய்ந் திப்பூ [யே.
வினைவிடுத்தாங் குற்றனையோ மெய்த்தவன்ருள் பெற்றனையோ விளம்புவா

இவை.

பாலைநகர் வித்வான்
கந்தசாமிக் கவிராயரவர்களி யற்றியது.

கதிரைவே லுவலன்று னிறந்தா னென்றுரைத்திட்ட கண்யமிக்க
மதியுறு நன் மாணவனும் பாலசுந்தரக் குரிசின் மயக்கங்கண்டு
பதிதலங்கண் மன்னியவேற் பிள்ளையே யென்றயர்ந்தேன் பகரேன் வேறு
மதியரவப்பகையின்றி வைத்தகடவுட் செயலே மகிழேனம்மா ?

கல்லாத மூடரெல்லாங் கசக்கநின் றன்பெருமை தனைக்கனி விலாது
பொல்லாத வினைவயத்தாற் புகன்று பெருந்தீ நிரயம் போகப் போரார்
அல்லாருங் களப்பெருமான் குமரனடி யனவரத மறிந்தே யேத்தி
சொல்லாரக்காட்டி சோமசுந்தரன் பின்போயினையே சுகமோ வையா

என்னுடைய நட்பொரீ இ யெங்குற்றுய் சதாவதானஞ் செய்தோய்
துன்னியகா தல்வைத்துத் துணைவனுமாணவனுன சுந்தரன் தன்னை
மன்னி யிருந்தனை யிப்பால் விட்டுமே வெள்ளிவரை மாதேவன்சீர் [தேர.
பன்னியே யுற்றனையே முகப்பொலிவு யெஞ்ஞான்று பார்ப்பேனங்

இஃது

இரங்கூன் முத்தமிழ்க்கவி

முத்துகிருஷ்ண பிள்ளை.

அவர்களியற்றியது.

பைந்நாகப் பாயல்விட்டு பச்சையாலிலை துயின்ற பரமனேடும்
பைந்நாகப் படமுடையான் சீரன் றிப் பிறிதொன்று பாராயென்றும்
சுன்னுகம் வரு குமாரசாமி பிள்ளை நட்பெம்பால் சுருங்கக் காட்டி
மைநாக வலியொத்த மன்னவனே யினியெமக்கு வரைவார் யாவர்

நேரிசை, வெண்பா.

ஆற்றுகிலே னெங்கதிரை வேலப்பா நின்மாட்சி
சாற்று திறந்தேறேன் சரியாக—மாற்றலர்கள்
வீண்பழிகள் விட்டு வெறுக்கைப் பெறவமலன்
காண்பதற்குச் சென்றனையோ காட்டு

இஃது

திருவையாறு பஞ்சநதமூர்த்தி சுவாமிகள் கூறியவை-

கட்டளைக் கலித்துறை

பாவலர் பற்பலர் செல்வர்கள் பற்பலர் பாரடங்க
மேவின ரேனு மவராலுலகுக்கு மெய்ப்பயனென்
நாவலர்போலிங்கு நன்மைகள் காட்டி யிந்நாள் வருந்த
சேவலார் வேன்முரு கன்கழற் சேர்ந்தனை செப்புவையே

இவை

கு. தா. லாலாபேட்டை சித்தாந்த ஞானப்பிரகாச சபையின்தலைவரும்
உறையூர் சைவசித்தாந்த சபை தனசாலாதிபருமாகிய

தே. பெரியசாமி பிள்ளை அவர்க ளியற்றியது.

என்னுயிருக் குயிராய கதிரைவேற் பெருமானை
யிழந்து நாயே
னென்னினியான் புரிவதற்கிவ் வுடல் கொண்டிங்கிருப்ப
தெனவெண்ணியின்னே

கொன்னவில் வெங் கூர்வாள் கொண் டுடல்போழ்த்து, வுயிர்துறக்க
குறிக்கவில்லேன்
கன்னவிலு நெஞ்சுடைய கடையேனுக்கிவ்வுணர்வு
கதிப்பதாமோ
தன்னெஞ்ச மறிவதுபொய்த் தபிமானத்தில் வாதஞ்
சாதித் தெய்க்கும்
புன்னெஞ் சத்தவர்போலா துண்மை நெறிதலை நின்ற
புனித நீதான்
பொன்னஞ் செஞ் சடைப் பெருமான் திருவடியிற் புக்கொளித்தல்
புகலக் கேட்டிங்
கென்னெஞ்சம் படும்பாட்டிற் கெல்லையுண்டோ விழைகண்டு
மிரங்காயென்னே ?

ஏகவியோ மத்தினட மிடுபெருமான் பரத்துவமே
யென்று நாட்டும்
மாகவியோ னென்றிசைக்குங் கதிரைவேற் புலவர்மணி
வண்பார் நீத்துத்
தூகவியோரியாவருமே தயரும் விதம் பிரிந்துகதி
தோய்ந்ததாய
தேகவியோகங்கேட்கச் சிறியேன் புன் செவிக்கிருந்த
தீமை யென்னே ?

மண்ணுலகிற் கலந்தொன்ருய் வேருனவத்துவித
மாண்பினேய்ந்திங்
கென்னினுமே யெனக்கினிய பதிகருவூ ரமர்ந்தருளு
மிறைவனென்ற
நின்னருமைத் திருவாக்கினரும் பொருள்க தெவண்விரிக்க
நேருமன்ருே
அன்னையினுமென்பால் மிக் கன்புடைய கதிரைவே
லண்ணலண்ணல்

அவதான மெட்டியற்றற் கிரண்டு குறையுளதவையு
மறிவாமென்றே
தவநேயமி க வென்பாலுரைத்துமே சின்னுளிற்
சதாவதானந்
திவமாகச் சென்னையின் க ணறி ஞர் பலர் கொண்டாடச்
செய்தாயென்ருல்
நவமேய நின்றகமை தெய்விகமோ மனுஷிகமோ
நவிலா யெந்தாய்.

ஐயகோ விப்புவிக்குப் பாரமதா யானிருந்திங்
காவதென்னே
தூயவே தாகமசாத் திர புரா ணங்களினுற்
றுலங்க நாளுங்
கையமரா மலகமெனச் சுத்தாத்து விதவுண்
மை கவின நாட்டும்
மெய்யவனுமொரு கதிரை வேற் பாநுவருட்
கடலில் வீழ்ந்த பின்னே.
நனவகத்துச் சின்னுளா நினைக்காணு தல
மருமிந் நாயினேற்குக்
கனவகத்து வந்தருளித் திருவுருக் காகூஷிதந்து
கதிரை வேலோய்
விநயமொடு பணிகள் சில விதித் தனையான் மிக
மகிழ்ந்தேன் விரைந்தென்னுளோ
உனகனிருகழல் சேர்ந்தா யெனக்கேழ்க்க
வாவிபதைப் புறுகின்றேனே
சினைதுமிக்குந் திருவெண்ணீ ரணி நுதலு மக்க
மணி விதியிற் சேர்த்துப்
புனைதருகன் டிகையழகு பொலிமிடறு
மஞ்சாத போரேறேபோ
னனிபெரிய வவைநடுவணின்று யர்சித்
தாந்த வியனுட்டுன் மாண்பு
மினியெளியேனெக் காலத் தெவ்விடத்தி
லெதிர்ப் படுவ னெந்தா யெந்தாய்
நின்பால்மிக் கன்புடைய கதிரைவேனு வலர்க்கு நேர்ந்
ததெய்வப்
பொன்போல் வாடனை யுண்டு கண்ட சுவைமுதிர்ச்சி
யினுற்பொருந்த விந்நா
ளன்பான் மற்றனையனையும் பசுபதியுண்
போதெங்கட் கிரங்கியன்னுன்
தன்பாலோவாத சௌந்தரத்தாயே நீயேனுந்
தவிர்க்கா யென்னே.
தம்பிரான் றோழருடன் சேரர்பிரான் றிருக்கைலை
சார்தற் காற்று
திம்பரா ரவரன்ப ருடல் போழ்ந்து வீரதநு வெய்திச்
சென்ற

நம்பவரந் திரமொடன் புனக்குளதோ வென்
பிதற்றி நலிவாய் நெஞ்சே
நம்பிரான் கதிரைவேனு வலனே சிடிலவன்
செய் நன்னூ லுண்டே

உற்ற பராபவவருடத்துயர்மீன மதியிலோங்குறு
சுக்கிலபக்கத் தொண்மக நன்னுளி
நற்றவவீனுகான நகர்மேலைப் புலோலி நாகப்பக் குரிசிலுள
நயக்குறுமின் மகனுய்க்
கற்றவரேத்துறு புதுச்சந்நிதி சந்தனருளாற்
கருதுபுரமத விருட்கோர்க் கதிரெனவே வந்த
குற்றமிலா தொளிர்கதிரை வேற்கோ மானீசன்
குரைகழற்சே வடிமலரிற் கூடிமகிழ்ந்தனனே

இவை

கு. தா. லாலாபேட்டை சித்தாந்த ஞானப்பிரகாச சபைத்தலைவரும்
ஈரோடு லண்டன் மிஷன் ஐ, ஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய,
B. சிவபாதவிருதயம் பிள்ளை யியற்றியது.

கங்கைநதி சடைமிலைந்த கண்ணுதலார் திருவடிக்குக் கசிந்தவுள்ளத்
துங்கவன்பன் மாயாவாதத்துவம்ஸ கோளரியாத் துலங்குமேலோன்
பொங்குகூல்வளை மேலைப்புலோலிநகரான் புலமை பொலிந்தோர் நாப்பண்
செங்கமல முகமலர்ந்தே பிரசங்க மழைபொழியுஞ் சீர்த்தகொண்மூ.

ஆரணிநற்சமத்தானச் சூரியெனுங் கதிரை வேலறிஞர் கோமான்
ருரணியிற் கலியையாயிரத்தெட்டிற் சார்ந்த பராபவவா மாண்டி
னேருறுபங்குனித் திங்கள்பன்மூன்றுந்தேதி யினி னிகழ்வெண்பக்கச்
சீருறும் பன்னிருதிதியிற் செந்தீ வண்ணனுரிமைசேர் வாரத்தில்.

உலகமெலாமுய்ய வொளிர்கனகமன்றி
லிலகுநடமியற்றுமெந்தை— மலரடிக்கீழ்
மேவிப்பிறவா விளங்குமுத்திபெற்றுய்ந்தான்
பூவிற்றேன் வண்டிற்பொலிந்து.

ஷை சித்தாந்த ஞானப்பிரகாச சபை உதவி சபைத் தலைவர்
கருவப்ப நாயகன் பேட்டை மு. மாரியப்ப பிள்ளையவர்களியற்றியது.

நீர்கொண்டகடலாடை நிலவலயந்தன்னியருணீர் மைத்தாய
சீர்கொண்டவைதிகமோ டருஞ்சைவ நனிவிளங்கச் செய்ததேபோல்
நார்கொண்டவுளத்தினொடு மின்ஞான்று மெவ்வுலகி னுட்டச்சென்று [யா.
பேர்கொண்டபுகழ்படைத்த கதிரைவேற் பிள்ளையெனும் பெரியோயை

கரும்பிருக்க விரும்புகடித்தேங்கு புறமதக்கோடை கடிதின்மாய
விரும்புருக கல்லுருக்கக் கல்லாதே முளமுமினிதுருகச்சேந்தே
ன்ரும்புதமிழ்ப்பிரசங்க மாரிபொழிந்தருஞ்சைவப் பைங்கூழ்வாடா
திரும்புவியினனிவளர்த்த நின்பெருமையெந்நாளு மியம்பாரியாரோ.

சாற்றுபுறச் சமையவா திகளாகும் மதத்தவரிற்ற றுகண்மாக்கள்
கூற்றெனுநின்பிரசங்கக் கற்சனைகேட்டுளங் குலைந்துகுமிறிட்டோடத்
தேற்றுமுலகெங்கணும் போ யுலாவுமொருசிங்கமெனத்திகழ்பேர்வாய்ந்து
நீற்றொளிகண்டிகைபுனைந்த நின்வடிவமியான் காண நிலவிடாதோ.

பன்னலஞ் சாரதிவீர ராமபாண்டியன் றொடுத்த பாக்களாய
நன்னயஞ்சேர் நைடத நூலுமிடையே நனிவிரித்து நலக்க வீந்த
சொன்னயஞ்சேருயர் கதிரை வேலோய் நின்றூய குணசீலங்கண்டே [றோ.
பொன்னயஞ் சேர்வேணியினு ரழைத்திடினு மெமைப் பிரிந்து போதனன்

வேறு

கலியுகத்தையா யிரத்திரு நான்கிற் கலந்திடு பராபவ வாண்டிற்
பொலிவுறுமீன மதிவளர் பக்கம் புகறுவாதசியன்மா மகமோ
டிலகு மங்கல நாடன்னின் மாதேவனிணைமலரடிநிழலடைந்தான்
மலிவுறு புகழெங்கதிரை வேலெனும்பேர் வாய்ந்த நாவலர் சிகாமணியே

இவை

உறையூர் சைவசித்தாந்தசபை அடியவர்களிலொருவரும்
வாஞ்சை வைத்திநாத செட்டியார் அவர்கள் மாணாக்கருமாகிய
ஷெயூர் ஜெ. சாமிநாத பிள்ளை இயற்றியது.

மன்னியமா யாவாத மொன்றினுக்கே யன்று புறமதங்கட் கெல்லாந்
தன்னிகரிலொரு பெரிய சித்தாந்த கோளரியாய்த் தரணிமீதே
மின்னிய நங்கதிரை வேலரசேநிற் கென்கொல் பிழை விளைத்தே மற்றுற்
புன்னெறியேந் தமை நீத்துக் கைலை வரைக்கெழுந் தனையாம் புலம்புமாறே

அருட்பாவின் புகழ் விரித்து மருட்பாவின் வலி கெடுத்த வண்ணா நீதான்
பொருட்பாவு மத்துவித சித்தாந்த வுண்மை நெறி பொலியச் செய்யுந்
தெருட்பாவும் பிரசங்கத்தெளிவ முதமடுப்ப தினிச்சிறியே மென்றோ
யிருட்பாவு மனத்து சிறோருவக்கும் வகை கைலைவரைக் கெழுதாயின்றே.,

இஃது
வித்வான்
கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள் கூறியது.
கட்டளைக் கலித்துறை.

சித்தாந்த சாத்திரஞ் செவ்வையாய்க் கற்ற சிகாமணி பொற்
சித்தாந்த நூலைத் திருத்திப் புதுக்கிய செல்வனு நீ

சித்தாந்த நற்சபைக் கூட்டுந்திறமை செறிதலொடு
சித்தாந்த போதந் தெரிக்குஞ் சமர்த்தனைத் தேர்கிலனே

பரசமயத்தா டணைசெவி கேட்டுப் பரிவினொடு
பரசமயத்தார் மதிப்புறு வார்போற் பரிந்திலையாற்
பரசமயத்தார் வினவுக்குறுவிடைப் பார்த்தளித்த
பரசமயக்கோ ளரியெனும் பாவலப் பார்த்திபனே

வெண்பா.

வில்லாய் புலோலிநகர் மின்கதிரை வேற்பிள்ளை
தன்னாயென் மாற்றந் தரணி மிசை—வள்ளியோய்
பார்த்திருக்க வைத்துருவம்—பாய்ந்தனை யென்னேபரம
தீர்த்தன் கழலடியோ செப்பு

இவை

முத்தமிழ் ரத்நாகரம், வித்வான், ஸ்ரீமாக் பாநுகவி அவர்கள் இயற்றியது.

சீரேறுசைவ சிகாமணியே நீற்றின்சிறமேறு
புகழ்பகர்ந்த செல்வாகண்டிப்
பேரேறுமிறைவிழியின் பெருமையெல்லாம்
பெரிதேறமொழிந்தகலை வல்லோயந்தோ
நீரேறு சடைமவுலிப் பெருமானின்னை
நிலத்தேறவையாது கைலையென்னுங்
காரேறுகிரியதனி லழைத்தானேனுங்
கண்ணேறு நீருடையேங் கவிஞர் வேந்தே

ஏருறுகற் கதிரைவேற் பிள்ளை யென்னு மெழினுறு
பேருடனிலங்கி யிருந்தோயென்றுஞ்
சீருறு நற்புலவரெலா முள்ளிற்போற்றுந் திறமுறுதனுள
தென்பதந்தோ விந்நாள்
பேருறுவாழ்வது நீக்கிக் கைலையென்னும் பேருலகிற்
றிறையருளாற் பெயர்த்தானேனும்
பாருறுவோ ரழுதிறமே பகருநின்னைப் பாவலநீத்
துபுவிழையார் பாவலோரே

மண்ணமுநீர் தீயமுங்கால் வானமுமேழ் கிரியமு மவ்வானோர் தங்கள்
எண்ணமு மற்றுள்ளனவா மெப்பொருளுமமும் புலவரிறந்தாலென்னும்
வண்ண வுரைக்கிலக்கிய நீவானவர் சூடாமணிபால் வயங்கு நிற்கென்
கண்ணமுத நீருமொரு கடலாகும் வேனிலதைக் கறுத்ததந்தோ

எப்பெயர்க்கு மேற்ற திறத்தாண்மை கொண்டவியற் புலவவிறை
[முன்னரிலங்குமியவ்
வப்பணிந்த பெருமானை முன்னங்காணு மதுமுதன்மைத் திறங்காட்டு
[மேனுநின்னை
இப்படி யெப்படி யகன்று வாழுமந்தோ வீழத்தார் தவமணியே யிறை
[நூலெல்லா
மொப்பறக்கற் றேப்பமிட்ட பெரியோ யெங்காளுனையினியாங்
[காண்பமென்றுலை கின்றேமே
சிந்தனை யெம்பெருமானை யன்றிச் செய்யாத் திருவாளர் தமிலேயர்
[கோனைமேன்மை
யெந்தமலை நாட்டெழுந்த விறன்மிண்டப்பே ரிறைவனை நல்
[வரிஞ்சையூர்ச் சத்திதன்னை
எந்தவிதத் தும்பொருவும் பெரியோய் கல்வியெனும் வானுளெழு நிலவா
[யிருந்த நின்னை
யந்தரமே யிடமாக நடிக்கும் பெம்மா னழைத்தமையி னழுத்தம் விட்டுலை
[கின்றேமே

௳

இஃது

காஞ்சிபுரம் பிரமநகர் செங்கல்வராய முதலியார் அவர்கள் குமாரரும்
சாஞ்சி மகாவித்வான்
ஸ்ரீமத். பூ. ந. கந்தசாமி முதலியார்
அவர்கள் மாணுக்கருமாகிய
ம-௱-௱-ஸ்ரீ. பி. செ. முருகேச முதலியார் அவர்களியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடியா சிரிய விருத்தம்.

மங்குறவழ் மாடமலி யீழமதின் மல்லலுறு
மேற்புலவ கான நகரிற்
கங்குல்பக லற்றொளிசெ யாணருறு கந்தகோட்
டத்தரும கர்த்த ரூய
துங்கமிகு முள்ளத்த ஞகப்ப பிள்ளைபுரி
தூய்தவத் திற்றோன் றியே
திங்களென நின்றுல வித்தேகமறச் சிவ
னடியிற் சேர்ந்தாயென்னே? (1)

கதிர்காமப் பதிவாழ்நங் குகக்கடவு ளருளினினைக்
கடிதீன்ற காத லாலே
கதிரைவேலென்று பெய ருனக்கிட்டா ரப்பெயருக்
கிவ்வுலகோர் கழறு கின்ற

கதிர்வேலுக் கெதிர்வேலொன் றில்லையெனுங் கட்டுரைக்குக்
காட்சியது வாக நின்று
எதிர்வாதம் புரிபுலவர் தமையதஞ்செய் திடுமரியே
றெனுமொருபே ரிசைந்தா யன்றே (2)
நெற்றியதின் மண்ணையிடு நிந்தகரை வென்றிகொடு
நீணிலத் தேகான்ம வாத
முற்றிடுமோ யாவாதத் தோர்கடமை பொறுத்திட்டா
யுண்மையது சிறிது மில்லா
வெற்றுரையாங் கருங்குழியி ராமலிங்கன் மருட்பாவை
வீழ்த்திட் டாய் வியன்மிக் கார்ந்து
வெற்றியுறும் பனிருமுறைத் திருவருட்பாச் சீரதனை
விளக்கிட் டாய் வென்றி கொண்டே (3)
மண்ணுலகின் புலவருடன் வாதுசெய்து வென்றியுற்று
மகிழ்ச்சிகொடுவமர ரென்று
விண்ணுறையும் புலவர்தமைச் சொற்போரில் வென்றவர்தஞ்
செருக்கதனை வீட்டி டற்கே
கண்ணகலும் பொன்னுலகஞ் சென்றாய்கொல் கதிரைவேற்
பிள்ளையெனுங் கவிஞர்வேந்தே
யெண்ணமெலா முடிப்பாரியா ரியற்புலவ யினியுனைநான்
காண்பதென்றோ வியம்பி டாயே (4)
திரையளக்கர் தனைமலயக் குறுமுனிவன் றிருக்கரத்தா
லுழுந்தளவாச் செய்தே யுண்டான் [த்தி
கரையதிலாக் கலையளக்க ரதனையன்றே கடுகளவாய்க்
களிப்பினொடுங் கடிதி னுண்டாய்
வரையறுநின் னுரைமடுப்ப தென்றோநான் வண்மையனே
கவியேறே மானேர் நோக்கின்
பரைபாகன் றிருவடியிற் பதிந்தனையோ பகர்கதிரை
வேலெனும் பண்புற் றோனே (5)
மற்போரில் வென்றவர்கண் மானிலத்துப் புவிச்சக்ர
வாத்தியெனு மன்ன ராவார்
சொற்போரில் வென்றனைநீ கவிச்சக்ர வர்த்தியெனுந்
தூய்திருப்பேர் பெற்றாய் நின்பாற்
கற்போர்க டமைக்கடிதிற் கவிவாண ராக்கியுளங்
களிப்பிக்குங் கவியே றேநின்
பொற்பான பிரசங்கஞ் செவிமடுத்தென் னுளமகிழ்வ
தெக்காலம் புகலா யையா (6)

அலைசூழும் புவியொருவி நிலைமேவுந் துறக்கமதி
லார்ந்திட்ட பெற்றி யந்தோ
கலைவாணி குறையென்கோ கவிவாணர் குறையென்கோ
காசினியிற் பீடுற்றோங்கு
நிலையான சைவத்தின் குறையென்கோ நீளீழ
நின்னேயர் குறையே யென்கோ
தலையான தமிழ்ப்பாடை குறையென்கோ சாற்றிடுவாய்
சற்குணத்தின் றகைமிக் கோனே (7)

ஈரைம்பா னவதான மியற்றியிடுங் காலையினி
லெய்தியா னியம்பிக் கேட்கத்
தேரும்பா வொன்றெனுளங் களிகூர வுரைத்திட்ட
திறனையினி யென்று காண்பே
னோரம்ப னிளவலிணை யடிமறவாச் சீர்த்தியுறு
மெழின்மிக்க வேந்தா லேந்தால்? (8)

மன்றின்பான் மாநடஞ்செ யெம்பெருமான் றிருவடியின்
மன்னிடநீ சென்ற தோர்ந்தே
யின்றல்லோ கம்ப னிறந்தநா ளென்கவிதை
யின்றல்லோ ராஜசபைக் கேறுநா
ளென்றென்பா லோர்புலவ ரியம்பினு ரெனிலந்தோ
நின்சீர்த்தி யிசைப்பா ரியாரே
குன்றின்பாற் றீபமெனப் புகழ்பரப்பி யொளித்திட்டாய்
குணக்குன்றே கோதி லாயே (9)

எவர்பெறுவார் திருக்காஞ்சி யேகம்ப னியற்றளியிற்
பரிவட்ட மிசைமிக் கார்ந்தே
எவர்பெறுவார் திருக்காஞ்சிச் சிவநேசத் திருக்கூட்டத்
திரணியஞ்சே ரக்கமணித் தாழ்வடந்தான்
எவர்பெறுவார் பலபதியின் புகழ்பரிசு மினிதிடவே
யேற்று நனியிங்கு வாழ்ந்தே
யெவர்பெறுவார் சிவபெருமாற் கன்பான பிரதோட
காலமதி லீசனிணை யடிகளம்மா (10)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சீரார்ப ராபவத்தின் சேர்மீனம் பன்மூன்றிற் றிகழநின்ற
வோராருஞ் சுக்கிலத்தி வியற்றுவாதசிதிதியி லியமிக் கார்ந்த
போராரு மாமகத்திற் பெற்றியுறுங் கதிரைவேற் பிள்ளையென்னும்
பாராரும் புகழ்படைத்தோன் பரமனடிச் சேர்ந்தடையும் பண்புநாளே (11)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

இவை

காஞ்சீபுரம் ம-ா-ா-ஸ்ரீ கோவிந்தராஜ முதலியார் அவர்களாலியற்றிய
இரங்கற்பஞ்சகம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

பொன் பூத்த வீழநகர்ப் புலோலியினிற் பெரியருக்கே புனிதமாய
மின் பூத்த வோர்மகவாய் வந்து செவ் வேடிருநாம மிளிரக்கொண்டே
மன் பூத்த வுவரிசூழிப்பாரிற் புகழ்பரித்த மன்னா நங்கள்
கொன் பூத்த குமரகோட் டத்திலுறு குமரன்றாள் குறுகினாயோ (1)

கதிரைவிடு பானுமுதற் புலவரெலாம் பத்திரால் களங்கமில்லாக்
கதிருறுமுக் கண்ணுடையான் கழல்புகவே நன்மாட்சி கண்டாரன்றோ
கதிரைநகர்த் தலக்கடவு டிருநாமம் புனைந்தெமக்கே சதியை யூட்டுங்
கதிரைவேற் பெருந்தகையே நின்கனிவிங்கெவர் மருங்கே காண்பே மன்
[னே

என்னாவி யுளங்குளிர வென்தம்பி யெனுமாற்ற மெவர்பாற் காண்பேன்
பன்னாளு நைந்துநைந்து வுருகவெனை விட்டதுவிம் பரிவேயின்று
பொன்னாடுந் தொழுஞ்சைவ நன்னாடு புரந்தளிக்கப் போந்த நீவே
றென்னாடு சென்றனையெ னண்ணாவிங், கிசைத்திடுவா யெழின் மிக்கோயே

என்னிலுமெனக்கே யினியவனென்று வெண்ணியே விடுத்திடுநிருபந்
தன்னையே நினைக்கத் தரிக்கிலேன்றேகந் தாங்கொணாத் துயரமேலிடுமால்
பன்னியே நிற்சீர் பாடுவே மெனிலோ பங்கயமுகக்குறியென்று
துன்னுமோ புரசை வதிந்த நற்றுறையே சோகமே தவிர்த்திடு மின்றே

கண்ணினுண் மணியே கருதருந் துணிவே கற்றவ ருள்ளொளிர்விளக்கே
மண்ணினின் மகாரைப் பேணுதாய் தமர்போல் மாட்சியை விட்டது வென்
பண்ணவன் முளரிப் பதமது வேட்ட பண்பினாற் பரனுரு வுறவே [னே
நண்ணினைகொல்லோ ஞான நன்மணியே நாட்டமே காட்டுதியின்றே

கட்டளைக்கலித்துறை

துதியார் பாரபவக் கும்பநற் றிங்கள் சுபதினமா
வதிசேயினாளிற் றுவாதசி கூடு மகமதனிற்
றதியது வென்றே புகழேய்ப்பு லோலி சைவமணி
கதிரைவே லாவலன், சேர்ந்தான் பரமன் கழலடியே

இவை
யாழ்ப்பாணத்துத் தெல்லியம்பதி
மகா-ள-ள-ஸ்ரீ. தே. அ. இராசரத்தினம் பிள்ளை அவர்கள்
மேற்கூறிய தமது ஆருயிர் நண்பரின
தேகவியோகத்தின் மீது
சொல்லிய
சரம கவிகள

நேரிசை வெண்பா

சீர்த்த பராபவத்துச் சேர்மீன மாமதியி
லார்த்தபதின் மூன்றுபௌம னாறிரண்டில்—வாய்த்ததிதி
நாவலர்கள் போற்றுமெங்கள் நற்கதிரை வேற்பிள்ளைப்
பாவலன்பார் நீத்தான் பகர்.

அறு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

முன்னிசைகொள் குடமுனியும் சேடனும்வான் மீகனுநின் முன்னில் லாது
தென்னிசைகொள் வரையிடத்தும் பாரிடத்தும் புற்றிடத்தும் சென்று புக் [கார்
இங்கிலத்துட் புலவருனக் கெதிரில்லையென் றேகதிர்வே லேந்த லேநற்
பொன்னிலத்துப் புலவருடன் வாதுசெய்யப் போந்தனைநீ புகல்வா யந்தோ.

வேறு

அரனிடத்தே யுதித்தெழுந்து குறுமுனியை யாதரவா யடைந்து போந்து
பரவுதமிழ்ப் பாண்டியரின் பலகைமிசைப் படிந்து பின்னர் பண்டைத்தாகும்
வரநிறைந்த வடமொழியை வரித்தினிய புதல்வியரை வளங்கி நீகை
தரவெழுந்த தமிழணங்கு தவித்திட—நீ தணத்திடுதல் தர்ம மேயோ

கலித்துறை

சற்குண மேமுத் தமிழ்மணி யேதமிழ் நாயகமே
தற்பர ஞானக் களஞ்சிய மேதணி யாவிளக்கே
யற்புத மேசெந் தமிழ்நாடு போற்று மருமணியே
விற்பன மேகதிர் வேலென ஞானம் விளங்கிடுமே.

முன்னாளிற் சம்பந்தர் மாணிக்கர் பின்னும் முதன்மைபெற்ற
மன்னுகு மப்ப ரொடுசுந் தரர்சைவ மாண்புபெற்றார்
பின்னாளி லீழத் தறுமுக நாவலன் பேர்வகித்தா
னிந்நாளி லிங்குனக் கரிணை யாவரிப் பூதலத்தே.

பண்டிதன் பாவலன் நாவல னென்று பகர்ந்து பொய்யாய்க்
கண்டிதம் பேசும் கசடர்தம் வாயைக் கடிதடைத்து
மண்டிடும் மாய மயக்கொழித் தேயரன் மாண்பதத்தை
யண்டிடச் செய்தனை யென்றறை வாருன்ற னன்பர்களே.

தேற்றரவுச் செய்யுள்

ஐயோ வுலகி லழியா வரம்பெற் றியாரிருந்தார்
ஐயோ மரணம் வருமெனல் நிச்சய மாதலினால்
பொய்யான வாழ்வும் புலையாட்டும் விட்டுநம் பூதலத்து
மெய்யான வாழ்வடைந் தான்சதிர் வேலெனு மேலவனே.

கலி விருத்தம்

அண்டர் போற்றிடு மம்பலத் தாடியை
வண்டரேத்திட வந்த வரன்றனைத்
தொண்டு பூண்ட தொழும்பனெம் வேலனை
கண்டு நெஞ்சங் களிக்கட லாடுமால்

இவை,

அக்கினிக்குலாதித் தன் பத்திரிகை மானேஜரும், வருண தருப்பண நூலிற்காசிரியருமாகிய சிந்தாதிரிப்பேட்டை,

ம-ா-ா-ஸ்ரீ ஆறுமுகநாயகரியற்றியது.

பலகலைக ளின்பயனைப் பக்குவர்பாற் றெளிந்திங்கு பரிந்தே போந்து
பலசபைக்கு நாயகராய்ப் பாஞ்சராத்திரம் பௌத்தம் பறக்கச்செய்தே
பலப்பலநூல் வெளியாக்கிப் பாவலோரேங்கியிடப் பரித்தவாய்மைப்
பலத்தையெவண் விட்டனையோ வெங்கொளித்தாய் பாவலோய் பசர்வா [யின்றே

சாத்திரத்தின் கடற்புகுந்து தக்கசிறப்பயன முதைத் தக்சோர்க் கெல்லாங்
காத்திரத்தோ டவரறியக் காட்டுபெருந்தகையாய சதிரைவேலோய்
சாத்திரத்தின் வழிவிட்டுச் சாதிபுறட் டாக்கியவர் தால்களோய
நேத்திரங்களிருள நனிகண்டனவாள் கொடுத்தார்த்த நேர்மையென்னே.

வருணசிந்தாமணிக்கு பலசிறப்புகவி கொடுத்தோரை வாட்டவன்று
தருணமெனநோ ஞமைத்தாக்கி யுளம்பலபோக்கால் தயங்கவைத்தார்
கருணைபொழிக் காங்கேயன் றண்ணருளா லவையனைத்துங்கரியச் செய்தே
யருணனென வுலவினையே யன்புடையோய் நினசமர்த்தை யறிவார்யாவர்.

அவதானஞ்செய் காலத்தறு முகனைச்சிந்தித்தே யறிவோர்காணச்
சவகாசத் தோடிரண் டறக்கலத்தற் பிரசங்கஞ்சலியா திங்குகெம்
பவமாறக்காட்டிய நின்பண்பதனை யெவர் மாட்டுபோர்ப்பேனின்று
பவனடிக்கீழுற் றனையோபகராம லிருப்பதுன்றன் பரிசோவையா.

கலிவிருத்தம்.

மன்னுபராபவ மாபங்கு னிம்மதி
துன்னுசெவ்வாயிற் றுவாதசிப் போதினில்
மன்னன் சதிரைவேல் மாநிலம் விட்டுமே
பின்னிணு ரரன் பெய்கற் கீழரே.

இவை சதாவதானம்
ஸ்ரீமந், நா, கதிரைவேற் பிள்ளை அவர்கள்
பிரதம மாணுக்கர்
ம-ள-ள-ஸ்ரீ பால சுந்தர நாயகரவர்களா லியற்றப்பட்ட
(பிரபாவ நவமணிமாலை)
நூல்

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.
அது பன்னிரண்டடித்தரவு. (க)

பொற்பமரு மீழநகர்ப் புண்ணியத்தாற் புலவரெலாம்
அற்புகொடு கானஞ்செய வப்பெயரைப் பரித்ததுவாம்
மேலைப்பு லோலியென மெய்த்தவத்தோர் விளம்பியிடச்
சாலவுமே பலகோயில் சார்ந்திருக்கும் பெற்றியதாம்
கதிர்காம நங்கடவுட் கதித்திலகுஞ் சந்நதியில்
விதிமுறையாற் பூசனைகள் குயிற்றியவோர் மேன்மையதால்
வேளாண் மரபுறூஉம் வித்தகனும் நாகப்ப
வேளின் றவப்பயனே விளக்கவிவ ணோர்சுதனுய்
வந்தருள தந்தைதமர் வாட்டமெலா மொரீஇப்
பந்தமது கொண்டரிய பாங்குபல வுஞற்றிடவும்
பதியாகுங் குமரனவன் றிருநாமம் பரித்தநங்கள்
கதிரைவேற் கவிஞ விங்கு கழறுமொழி யொன்றே கேள்.

இவை ஈரடித் தாழிசை (எ)

ஐயாட்டைப் பிராயமதி லருங்கலைகள் கற்றிடற்கு
வையந்துதி நாவலர்தஞ் சங்கமதில் மருவினையே
கற்றதன்றி வேறுபல கண்ணியராங் குருவணுகிப்
பெற்றமூர் சிவன் புகழே பிறங்குபுராண முணர்ந்தே
ஐயந்திரிபு மயக்கமுதற் குற்றமொரீஇ
மெய்யிற் றிருநீறு மிளிரவுமே வீற்றிருந்தோய்
சங்கநூல் பலசைவ சித்தாந்த சாத்திரமும்
பொங்கமுட னிலக்கணமும் புரையின்றித் தெரித்திடுவோய்
நீடித்த பரன்பணியே செய்வதன்றி யுளநெகிழ்ச்சி
கூடவுமே யாழ்ப்பாணங் குலவியிருந்தா யன்றே ?
தக்ககுரு பரன்முன்பே தனித்தசிவ தீக்கையுற்றுப்
பக்குவனன் முதிர்ச்சிகொடு பாருவக்கவாழ்ந்து செந்தீ
வடிவாம்பிகைத் தாயைவதுவை செய்துமுன்போக்கி
படிதோய விருமகவைப் பரிதபிக்க விட்டாயே

இவை நாற்சீர் ஓரடி யிரண்டு கொண்ட அம்போதரங்கம்.

கலைபல தெரியுயர் சிவகுகன் புகழே
தலைவகி புலவநீ தலந்தொறு மணுகினை
சொலற்கரும் பெரும்பிர சங்கமுந் தொகுத்தனை
உலகினர் வினைதுய ருரைசெயவு வந்தனை

இவை மூச்சீர் ஓரடி அம்போதரங்கம்:

செகதலப் புறமத மோட்டினை
திருவருட்பாத் திறந் தீட்டினை
யகச் சமையக் கருத் தாழ்ந்தனை
யரும் புகழ்விட் டெவணேகினை

இவை இருசீர் ஓரடி அம்போதரங்கம்.

வேலெடுத்தனை பகையெடுத்தனை
மாலெடுத்தனை நகைகொடுத்தனை
மடிசமர்த்தனை பதவிசேர்ந்தனர்
இடிகொடுத்தனை பதவிசேர்ந்தனை

இவை பெயர்த்தும் ஈரடித் தாழிசை (ஞ)

புலோலி நகர்த் தோன்றினை நீ புறச்சமையங் களைந்தனை நீ ;
தலங்க டொறுஞ் சென்றனை நீ சார்ந்து தர்க்கம் செய்தனை நீ !
விண்டுவுக்கு நீறக்க முண்டெனவே நிறுவினை நீ ?
பண்டைய நற்பிரமாணம் பகரும் பெரு சமர்த்தனு நீ !
புத்தரவர் பொய்யுரைகள் பொருத்தமில யென்றனை நீ !
கத்துபவர் வாயடங்கக் கண்டனமுஞ் செய்தனை நீ ?
தாம்பிரம மென்றுரைக்குந் தன்மை மாயாவாதிகளைச்
சாம்பிரம மென்றுறுத்தித் தனித்த பட்டம் பெற்றனை நீ !
எத்தனையோ நூலியற்றி யெழிற் சிவன்றாள் வேட்டனையே
பித்தனுக் கென்றோ பொலிவை பிறங்கிடுவாய் மெய்யோயே !

ஆசிரியப்பா

கடல் புடை வளைஇய திருவளர் புவன
மடமகள் வதன திலகமா யிலகி
சிற்றுறீஇ யிலங்கைக் கடுத்ததோ ரீழம்
வெருள்பிணியின்மை விளைவொடு செறிந்த
கார்வளர் காவு மதித்தவ ழ்மாடமுங்
கற்றவரொலியொடு கழகமுந் தேங்கும்
பெற்றியுங் கந்த வேட் பெருமானின்
சந்நிதியாங்கு சாருந்தவத்தின

ருன்னு மந்திரக் கௌவையு மினிரத்
துற்றவெண் முளரியு மாம்பலுஞ் சூழப்

பூவுந் தளிரும் பொருளாத்தமதிட
மலரக்காட்டி நிற்குமவ் வளவிற்
புலவரென்பெரிய புலவராம் வானோர்
விண்ணிழிந்திவணே விரும்பியே கானப்

பண்ணொலி காட்டிய பண்பாலப்பெய
ருறூஉம் புலோலித் தண்பதி யதனுள்
வேளாண் மரபில் விளங்கிய சதுரன்
நாகப்ப வேளி னற்றவப்பயனெலா
மோருருக் கொண்டே யுத்தமமணியாய்
தோன்றியே யன்னவர் தூயதோருவகைக்
கடற்படக்காட்டிக் கனிவுடன் வளர்ந்தே
ஐயிரண்டாண்டி லருங்கலைப்புராண

மைப்பெருங் காப்பியச் செம்பொருணடையு
மெச்சுமே லழகர் நச்சினார்க் கினியமுந்
தொல் காப்பிய முதற் பல்காப் பியமு
மற்றுள கலைகளுந் தெற்றினி துணர்ந்தங்

கா்சு மதுரஞ் சித்ரவித் தாரமா
மோசைக் கவிஞர் சொலுயர்சிரோ ரத்திநம்
பாடல் படித்தல் பதப்பொரு ளுரைத்தல்
நாடகக் கவியிய னவிற்று நாவல

னாகியிங் கிவர்ந்தே நங்கட் குருமணியாய்
வந்தேயையந் திரிபு மயக்கம்
ஆம்பெருங் குற்ற மகற்றியுஞ் சென்னை
வதிந்துமே பன்னாள் வள்ளலாந் தணிகை

நாயகன் புராணப் பதப்பொரு ணவின்று
மச்ச முறுத்திபல் லோருள முவகை
யரும் பெருங்கடலி லாட்டியே பின்னர்
சமையத் தாபனஞ் செய்யுஞ் சதுர

புதுச்சந்நதி வாழ் கந்தவேற் பொலன்று
ளன்புவைத்தேற்றி யவனனுபூதிச்
செப்பியதிறத்தா லன்னவன் றண்ணருள்
கூடவு மீரெட்டவதான முங்கூறிக்

குவலயமாந்தர் குதூகலமுறவே
சென்னையிற் போந்த சிலகவிப் பட்டம்
போலா தோழீஇ புங்கவரோடு
வித்வரத்தினங்கள் மிளிருமவ் வவையில்
வேலுமயிலுந் துணையென நவின்றே
சதாவதானஞ் சரிப்படக் காட்டிப்
பரிசேய்ஞானப் பண்போய் பண்போய்.
எங்குருமணியா யிருந்து காட்டி
யிழித்துநீ சென்றது வியப்பாமன்றோ?
எளியேன் பித்துரை யெவ்வாறாயினுந்
தள்ளாதுகொள் பெருந்தகையே முறையோ
இளக்குமிவ்வாய் மையைக்கேட்பது கடனே

எழுசீர்க்கழி நெடிலடியா சிரியவிருத்தம்

கேள்விக்கு வல்ல புலவர் துதிக்கக் கேண்மையறு மாந்தர் குழுமி
சூளிற்கு வுன்ற னுளமே யிருக்கச் செய்யாது வாழ்ந்த துரையே
கோளிற்கு மஞ்சாய் குணமே யுடையாய் குஞ்ஞமுற்று சிவன்றன்
றுளிற்கீ ழுற்ற சதாவதான தகுபட்ட மேற்ற தகையே

பத்தடியில் வந்த பலவிகற்ப பஃறொடை வெண்பா

தகையோ யென்றிருப் பதினூற் றக்கவர்கணின் குணத்தை
வகையோடு வாழ்த்துவதும் வழங்குவதுஞ் சரியன்றே
ஆவியிழந் தாலொழிய வரனுமதுடனேகள்
போவவதற் கண்டனங்கள் புகலாது நிற்காயே
சாசிற்குச் சிக்கிசிலர் கண்ணுதலார் நிந்தைமொழி
வாசிக்கக் கேட்டு மனமிரங்கார் மாய்த்தனையே
நல்லருட்பா வின்னதென ஞாலமெலா மோர்ந்திடற்கே
கல்வயிர மோடெமக்குப் பேணினையே கற்றோயே
மாயாவா தப்பேயை-மாய்க்கும் பெருஞ்சமர்த்தோய்
காயாய்நீ யெம்மிறையே காண்.

அறுசீர்க்கழி நெடிலடியா சிரியச் சரிதகம்

காணுவான் வருபவர்தங் கருத்துற்ற சந்தேகக் களங்க மாற்றிப்
பேணுவா யெழிற் கதிரைவேற்புலவப் பெருந்தகையே பேசச்சீர்த்தி
பூணுவா யிவ்வுலகின் புத்தமத விருளோட்டிப் புரை யொன்றில்லாத்
தாணுவாஞ் சங்கரன்றாள் சார்ந்தனைகொ லறியேன்யான் சாற்றாய் மன்னே

வஞ்சித் துறை

மன்னினாய் சென்னையம் பதி கன்னிபாலன் கழலடி
மன்னனின்தனை மாய்த்தவ சென்னி கொள்திற மென்கோலோ

கட்டளைக் கலித்துறை

என்கோலோ சென்றனை யெங்குரவாயிவ ணேழ்மை தனைத்
துன்பொடு வாழ்சுக மின்மையே கொண்டு துலங்கிடவே
வன்மன மொத்தனை நின்றனக் காகாவருந் தலென
மென்மொழிகாட்ட வுறுமோ சிறிதுவிளம் புவையே

ஒரு பொருண்மேன் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை

வையஞ்சொலுங் கற்புமினாள் வடிவாம் பிகையனுப்பிப்
பையவே சிவன்மருளிற் பாய்ந்தவன்றன் றிறமதனைத்
தூயமாய்ச் சொற்றிடுவாய் சூள்மனமே யிஞ்ஞான்றே
எப்புழுகு திருவியநஞ் சிவனடியார்க்கருள் சுரந்த
சுப்பிரமணியக் கடவுள் பராக்கிரமந் தொகுத்தானைச்
செப்பியே முறையிடுவாய் செகதலத்தே யிஞ்ஞான்றே.
ஆவினன் குடியழைத்தே யாண்டவன்றன் சந்நிதியிற்
பாவியே னுக்குமே பகரொணுப் பரிசளித்தோய்
கூவியழு மெளியன் முனங் குறுகிடுவாயிஞ் ஞான்றே,

சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா

இஞ்ஞான்று தர்க்க விய லறிவுறுத்திச் சென்னைப்
பிஞ்சாய பாஷண்டர் பித்துரைகணீக்கிப்
பஞ்சாய வழிகாட்டிப் பாய்ந்தவனும் புலவன்
விஞ்சுபுக ழுரையாத தாலென்ன தாலே
வேற்பிள்ளை சீருரையாத் தாலென்ன தாலே

கலிநிலைத்துறை

தாலாவீர மொழியைக்காட்டுந் தக்கோ யென்
பாலார் குறைகடீர்ப்பா ருளரோ பகரேன்யான்
வேலான் சீரே விளங்கத் தீட்டி வினையோட்டிக்
கோலஞ் சேர் குரைகழல் சரணுற்றாய் குறிமன்னே.

இவை

திருமயிலை, ஸ்ரீமந் அரங்கசாமி நாயகர் அவர்களையப்பற்றிய
எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வான்புகழே மக்கொடு முடியெனுமோர் வளம் பலபயக்கு மாவிலங்கைக்
கான்படர் தீபத்தனி செழுமேலைப் புலோலியாங் கவினகர் மேவும்
மேம்படுசைவ நலந்திகழ் வேளாண் குடியினிலுதித்த பாக்கியத்தோன்
தேன்மொழி கொழிக்கும் தமிழ்க்கடற் கடந்தோன் கதிரைவேற் பெயர்
[மிகச்சிறந்தோன்.

நூற்பலவியற்றிப் பிரசங்கவழியால் நுவல் புறச்சமயிகளுரையைப்
பாற்பட வொதுக்கியாகம வேதப் பயனுறவாதரித்தமர்ந்தான்
ஏற்புறுமவ தானங்களுஞ் செய்திங் கேகியே சென்னை விட்டகந்தோ
போற்றுவார் புணரப் பெருமலே மீட்டும் புகுந்தனன் பரகதிமாதோ.

அயிக்கமுற்றுலகோர் வாழவேயறிஞ ரருப்பல முயற்சிகள்புரிய
மயக்க முற்றிகலிச் சைவமாஜனத்தோர் மன்னிருக்ஷியாய் மலைந்தார்
வியப்பினும் பாட்டாவென்று போயி ராமலிங்கற்கு விளக்குவ தொக்கும்
நயப்புடனன்பு மலிபுகழ்ப் புலவன் நானில நீங்கினதம்மா ! !

இரங்கல்

கலித்துறை

மண்ணுலகத்தேயுயிர் விடுகாலை மா பாசத்
துன்னுறு சுற்றங் கவலுறு மென்றோ சூழ்மேகத்
தண்ணுறு நீலக்கிரிமிசை யாவித்தனி சோர்ந்தாய்
விண்ணுலகத்துக் கணிமையதென்றோ மேலோனே.

சிவம்வளர் சோமசுந்தர நாயன் சிவமேவ
வவம் வளர்சமயத் தவர்மலி யடுவா ரியாரேயென்
றிவணுள மருளாச்சிந்தனை யுறுவார்க் கிருணீக்கி
யவிரொளி யெழுமாலென வெளிவந்தாயறவோனே

மறைபுகழ் சைவத்துறை மரபறியார் மயலாலே
குறைபடுவாதக் கொடுமைகடொடரக்குல நீதித்
துறைவழி வெற்றிக் கொடியது தூக்கித்தூ நீற்றின்
முறை நிலைநாட்டிச் சிவபதமுற்றாய் முதியோனே.

இவை

ஸ்ரீமந் சிவபூஷண முதலியார் B. A. அவர்கள கூறிய
கட்டளைக் கலித்துறை.

சிவபூஷணமதைச் சேரக் கயவர் நனிசிதைய
சிவபூஷணத்தின் றிறங்களைக் காட்டித்திரிந்திருந்தோய்
சிவபூஷணமிளிர் தேகமறச் சிற்ப ரன் கழற்கீழ்
சிவபூஷணன் விட்டு சென்றனை யென்னினிச் செப்புவையே

எவரோ வழைக்கப் பெறுவேன் கலைகளினிதமர்ந்த
றவரோ டிணங்கும் பரிசெலாம் விட்டுத் தனிமையுடன்
துவரேயழகுறு சுந்தரன் கீழிற்றுலங் கினையால்
உவரார் கலியில மேங்குறவைத்த தெ னுத்தமனே

வேறு

கண்டப் பத்திரிகை கொடுக்கக்கடின மிலாதவையிடத் தேகற்றோர் மெச்ச
விண்ட பெருந்திறலோயே மேதினியிலினியென்று விரிக்கக் காண்பேம்
தொண்டர் புராணச்சரிதப் பிரசங்க மழைபொழிந்த துரையே மற்ற
தொண்டரையிங் கிறுத்தி துயர்க்கடற் படியவைத்த துனக்குறுமோ சொ
[ல்லாய்

இவை

ஷெயார் மாணுக்கரிலொருவராகிய பல்லவபுரம்

ம-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணிய நாயகரா லியற்றியன

வாதங்கள் பலபுரிந்து வாடாது வெற்றிகொடு மகிழ்ந்து வாழ்ந்து
கீதங்கள் பலவிரும்பிக் கிளரருட் பாத்திறங் கேட்டுக் கெழீஇய நட்பா
யேதங்கடமை யொரீஇ யிட்டமுடன் மாணவரை யேந்தி நாள்கள்
போதித்தோ யெங்கொளித்தாய் புரையற்றமேனிகொடு புனிதாயென்னே.

வெண்பா

அத்துவித சித்தாந்த—நான்மாட்சி யாரணத்தின்
சத்துகளைச் சார்ந்தார்க்குச் சாதித்த—வித்தகனே
கற்றோர்போ லாக்கிக் களங்கமற நேசிப்பார்
மற்றொருவ ரிங்கில்லை மன்

வழக்கிற்குடனின்ற—வண்பால சுந்தரன்
சழக்கின்றி நின்மகிமைச் சாற்ற—வழக்கே
யெடுத்தார் தடுத்தா ரிழித்தார்களின்னல்
கொடுத்தார் விளங்கார் குறி

புரசைப் பரசிவதமிழ்வேத பாராயண சபையார் கூறியவை

பைந்தமிழின் கலையுணர்ந்தே பரவியவிச் சென்னை யுற்றுப் பாவலோர்கள்
தொந்தமதைக் கொண்டுபல புறமதங்களைச் சுருக்கித் தொலைவிலாத
செந்தமிழான் மறுப்புகளுஞ் செய்துமே வலியுறுத்திச் சென்ற செல்வா
சொந்தமாய் நினைக்காணத் தொக்கவறி வெஞ்சபைக்குத் தொகுப்பதென் [ரோ

தண்டமிழின் வேத பாராயண நற் சபைப் புரசைத்தாபித்தன்று
கொண்டாட்டம் பலபுரிந்து கோதிலாப் பெருந்தலைமைக் கொண்டாயன்று
திண்டாட்டம் படவைத்துச் சென்றனையே வேறெவரைத் தேடிக்காண் [பேம்
வண்டாடுங் குழலுமையாள் மணவாளனடியின் கீழ்மன்னு மன்னு ?

ஆசைச்கடற்காட்டி—யாளாது விட்டென்றன்
பாசக்கடலிற் படவைத்தாய்—நேசமா
யேனிருந்தா யன்று முத லீசன் கழலுன்னி
மேனிலையைக் கொண்டனை யென்மெய்

இவை

அயன்புரம் இரத்தினநாயகரியற்றியன. [ண

இடமிருத்திப் பொருமேணிப்பா யென்றியம்பக் களிப்பெய்தி யெவருங்கா
விடங்கொண்டு சொற்பசர்வே னிருநிலத்திலுன் றனைப்போ லெங்குநேடி
யிடங்கொள்ளும் பலவழிகளைற்றிடிவேனெந்தாயே யீசன்றுளா
மிடங்கொண்டா யுலகொறுத்தக் காண்டலெவ்வாறேயோ விளம்புகையா

வடமலையில் மிதக்கதுயில் கொள்ளுபவன் மந்திரத்தின் வண்ணம்யாவும்
வடமொழியினின்றெடுத்து மன்பதர்கணனி நோக்கி மகிழுவண்ணம்
வடமலையு நாரணிபங்கன்பெயர்களிருப்பவற்றைவகுத்துக்காட்டி
வடமலையிலிருக்குநங்கள் சிவகுகன்றுள் மனதிருத்தி மகிழ்ந்தாயென்னே

கலைகுத்தும் மாந்தர்சிலர் வன்மனமுமிதுபோது கரைந்து நின்றன்
கலையளவுத்திறம்பேசிக் கிடக்கின்றுரையகோ சனிவைவிட்டு
கலையிறுத்துங் கரத்துடையான் நன்மாட்சிகண்டுமே கழறிப்போனாய்
கலையெலா மெங்குற்றதென்னேயோ நின்னுருவங் கரந்தபின்னே.

இவை

கோயம்பத்தூர் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமாந் சொக்கலிங்கம் பிள்ளை அவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

எத்தனையோ நூல்செய்தா யெத்தனையோ வுரைசெய்தா யிங்கே யின்னு
மெத்தனையோ பிரசங்க மெத்தனையோ புராணகதை யிசைத்தா யையா
வத்தனையும் யாமெடுத்திங் கியம்புதலென் றலமையா தழகார் நாவின்
வித்தகனே மெய்ம்மையனே மிளிர்கதிரை வேலென்று மிகுசீ மானே.

சென்றசென்ற விடமெல்லாஞ் சிவபெருமான் சீர்த்தியையே செப்பிப் போ
மன்றபுகழ்க் கதிரைவேற் பிள்ளையெனு மாவித்து வானே நீதான [ந்த
கன்றலைசூழ் காசினியை விடுத்தினிரு கண்மணிநேர் காத லர்க்குத்
துன்றுதுய ரூட்டிடுத லெனதுளத்துக் கொக்குமதோ சொல்லிடாயே.

கன்னன்மொழிப் பின்னுகுழற் கன்னியமர் பங்குடைய காள கண்டன்
தன்னறுதீத் தருபுலிங்கந் தனிலுதித்த சரவணத்தன் றும ரைத்தா
னுன்னியுளத் திருக்கடையாக் கதிரைவேற் கவின்புலவோ யுன்கல் விக்கு
மன்னுமுளத் திருக்குடையார் மனமகிழ்ந்திங் குறைகவென்றே வானுற்
[றுய்கீ.

பாகட்ட மென்சொலுமை பங்குறையும் பெருமானார் பயந்த பாலன்
மாகட்ட மரியவா னவர்களித்த வசுரர்குல மாய்த்த வற்குக்
காகட்ட விழுமுனமே மலராய்ந்து தொடுத்தகத்திற் களிமீக் கூர்ந்து
போகட்ட புகழ்க்கதிரை வேற்பிள்ளை போங்காலம் பொருந்திற்றேலோ!!

முற்றிற்று.

Chengalvaroya Naicker's Orphanage Press, Vepery, Madras.